தென்றல்

வார இதழ்

ஆசிரியர்:

கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 25 புதிய காசு | வெளிநாடு 30 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 6 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, ஆடி 23 (8-8-'59). சனிக்கிழமை | இதழ் 8



யாவலர்?

★

பொங்கிக் கிளம்பி வரும்
சிங்கத் தமிழ்க் குலத்தின்
தங்கக்கலை மொழியின் காவலர்!-பகை

அங்கம் சிதைந்து நிலை
பங்கப் படும் வகையில்
சங்கப்புகழ் வளர்த்த பாவலர்!

சொல்லுந் தமிழ்மொழியின்
சொல்லும் பொருளும் எதிர்
வெல்லும் எனப்படைத்த தூயவர்-உடல்

சொல்லும் அசைவு களில்
எல்லாம் தமிழ் வளர்த்து
ஒல்காத் தனித்தலைவர் ஆயவர்

எங்கே தமிழ்ப் பகைவர்
எங்கே எனக் கிளம்பி(ப்)
பொங்கும் மறப்புகழின் காவலர்-துணி(வு)

எங்கே இருப்பினும் என்
பங்கே என முழங்கும்
மங்காத்தமிழர் எங்கள் நாவலர்.

பழகுதமிழ் மொழிக்கென்றும்
முதுமை இல்லை-எங்கள்
பாரதிக்கும் என்றென்றும்
முதுமை இல்லை!

வாழ்க பாரதி!

கண்ணதாசன்

நாவலர் சிறப்பிதழ்!

செழியர் தேவை

அ. மு. பரமசிவானந்தம் எம். ஏ., எம். லிட்.

அவன் அன்று தோற்றத்தால் இளையன். சிறுவர் அணியும் அழகிய அணிகலன்களைக்கூட அணிந்திருந்தான். 'பால்வடியும் முகம்' என்பதுபோல் குழந்தை முகமே அவன் தோற்றத்தில் பொலிந்தது. 'இளையன் இவன்' என எண்ணிப் பகைவர் அவன் நாட்டைக் கவர நினைத்தனர். 'வயதில் இளையன்; எனவே போர்க்கு இளையவன்' எனக் கருதிற்று மாற்ருர் உள்ளம். அவர்கள் அப்படி ஒருவரோருவர் பேசிக்கொண்டு பெரும் படை திரட்டினர் போலும். படை திரண்டு அவனது பாண்டி நாட்டு எல்லையிலேயே வந்து சேர்ந்துவிட்டனர் என எண்ண வேண்டியுள்ளது. அவர்கள் அவ்வாறு 'அவன் இளையன், அவனை வெல்லல் எளிது' என்று பேசிய சொற்கள் அவன் காதில் விழுந்தது. உடனே சினம் கொண்டான்; சீற்றம் மிக்கது; வஞ்சினம் வாய் வழிப் புறப்பட்டது. "அவ்வாறு சிறு சொல் கூறிப் பதித்த மாற்றரை வென்றி கொண்டு யான் திரும்பேனுயின் நான் இன்னின்ன வகையில் கெடுக" என வஞ்சினம் கூறினுன்.

'சிறுசொல் சொல்லிய
சினங்கெடு வேந்தரை
அருஞ்சமம் சிதையத்
தாக்கி முரசமொடு
ஒருங் ககப் படேனுயின்'

எனக் கூறிப் பின், தான் பெறக்கடவதாகிய பழிகளை ஒன்றன்பின் ஒன்ருக அடுக்கிக் கூறினுன். பிறகு அவன் படை எடுத்துச் சென்று தலையாலங்கானம் என்ற இடத்தில், எதிர்த்த அத்துணை மாற்று வேந்தரையும் பொருது வெற்றி கண்டு விளங்கினுன். அவனே பாண்டியன் நெடுஞ்செழியன்.

அவன் வாழ்ந்து எத்தனையோ நூற்ருண்டுகள் கழிந்துவிட்டன. எனினும் அவன் தமிழர் உள்ளத்தில் நிலைத்த இடம் பெற்றுவிட்டான். அவனையே மாங்குடி மருதனுர் மதுரைக்காஞ்சி என்ற நீண்ட பெரும் பாட்டால் பாராட்டிப் போற்றினுர். ஆம்! இன்று அவன் இல்லை. ஆயினும் அவன்போன்ற செழியர்கள் சிலராவது தமிழ்நாட்டுக்குத் தேவை என்பதைத் தமிழர்கள் உணர்கிருர்கள். நாட்டின் நலங்காக்க நல்ல செழியர்கள் தேவை என்பது நான் கூருமலேயே விளங்குமன்ருே!

'சிறு சொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை' அடக்க நினைத்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். அடக்கியும்விட்டான். அவ்வாறு சிறு சொல் சொல்லும் கொடுமையாளர் அவன் காலத்தில் மட்டுமன்றி அன்று தொட்டு இன்றுவரை தமிழ்நாட்டில் வாழ்ந்துகொண்டேதான் இருக்கிருர்கள். என்ருலும் வரலாறு அவர்கள் அவ்வக்காலத்திலேயே அடக்கி ஒடுக்கப்படுகின்றனர் என்பதைக் காட்டுகின்றது.

இடைக் காலத்தில் தமிழ்நாட்டில் பிற மொழி வல்லவருக்குத்தான் 'தேவதானம்,' 'இரணிய கருப்பம்,' 'துலாபாரம்' போன்ற பெரும் பெரும் அறங்கள் நிலமாகவும் பொன்னுகவும் ஆற்றப்பெற்றன. தமிழ் நாட்டுக் கோயில்களில் அக்காலத்தில்தான் தமிழல்லாத பிற மொழி ஆட்சி செலுத்தத் தொடங்கிற்று என்னலாம். தமிழில் பிற மொழி கலந்து எழுதுவதையே பெருமையாக எண்ணிக்கொண்டிருந்த காலம் அது. அவ்வாறு எழுதிய புலவர்களே அக்காலத்தில் ஏற்றம் பெற்றனர். அவர்கள் தமிழ்பற்றிச் 'சிறு சொல்' சொல்லி அதன் பெருமையைக் குலைக்க நினைத்திருப்பர் என்பது நன்கு தெரிகிறது. எனினும் காலம் அவர்களுக்குப் பாடம் கற்பித்துவிட்டது. அவர்கள் எழுதிய கலப்பு நூல்களின் பெயர்கள்கூட நாட்டில் இன்று நடமாடவில்லை. சில மறைந்துவிட்டன. சில பெயரளவில் ஒரு சிலரிடையில் வாழ்கின்றன.

அதற்குப் பிறகு சில நூற்ருண்டுகளுக்குமுன் 'ஐந்தெழுத்தால் ஒரு பாடை' எனத் தமிழைச் 'சிறு சொல் சொல்லிச் சிறுமை தேட நினைத்தனர் சிலர். அவ்வழிச் சில இலக்கண நூல்களையும் செய்தனர். ஆனுலும் என்ன? அவர் தம் பெயர்களும் நூல்களும் நாட்டில் வாழவில்லை என்பதைக் கண்கூடாகக் காண்கின்ருேம். அவர் தம் இலக்கண நூல்கள் வாழ்விழந்து வழக்கிழந்து மாய்ந்துவிட்டமை நன்கு தெரிகிறது.

இவ்வாறு அன்று தொட்டு இன்று வரை அரசியல் ஆதிக்கத்தாலும் சமயம் முதலியவற்றில் கொண்ட பற்றினுலும் பிறமொழிகளை வளர்க்க நினைத்தவர் தமிழ்நாட்டில் உண்மைக்குத் தலைவணங்கத்தான் நேர்ந்தது என்பதை நன்கு அறிந்தும், இன்றும் சிலர் தமிழ்நாட்டில் பிறமொழியை அரியணை ஏற்ற அவாவுகின்றனர். இந்த நூற்ருண்டின் தொடக்கத்திலே தமிழ்நாட்டு மேடைகளில் 'ஆங்கிலத்தில் பேசவரும்' எனக் கூறிப் பெருமைப்பட்டவர்களெல்லாம், இன்று உணர்ந்து தமிழில் பேசக் கற்றுக்கொண்டனர். எனினும் அரசியல ஆதிக்க உரிமையால் சிலர் த ப்பற்றிச் சிறு சொல்' சொல்லுவது இன்றும் நிற்கவில்லை.

தமிழ்நாட்டில் பிற மொழியால் ஆக்கம் காண விரும்பிய பல்லவர் போன்ற பெருமன்னரெல்லாம், உணர்ந்தபின் தமிழால் அன்றித் தமிழ்நாட்டில் வாழ்வில்லை என்பதை அறிந்து தம் பணியைத் தமிழ்ப் பணியாக்கிக்கொண்ட சாட்சி நம் நாட்டு வரலாற்றில் நிலைபெற்ற ஒன்று அல்லவா?

தமிழ்நாட்டு அரசாங்கம் தமிழை ஆட்சிமொழியாகவும் பல் கலைக் கழகப் பயிற்று மொழியாகவும் ஆக்க முன்னிற்பது போற்றக்கூடியதே எனினும் அதைச் செயலாக்கும்போது நல்ல தமிழ்ச் சொற்கள் இருக்க அவற்றை வேண்டுமென்கிற வழக்கில் இருந்து நீக்கிப் பிறசொற்களைப் பயன்படுத்தும் சில அதிகாரிகள் தமிழ்ப்பற்றிச் 'சிறு சொல்' சொல்வதைக் கேள்விப்படுகிருேம். அரசாங்கம் நாட்டில் நல்ல தமிழ் வாழ இன்னும் முயலவேண்டும். பல்கலைக் கழகத்தே தமிழ்பயிற்று மொழியாவதைத் தடுக்கப் பலர் முட்டுக்கட்டைகளாக நிற்கின்றனர். எனினும் காலம் அக்கட்டைகளைத் தகர்த்து எறிகிறது என்பதைக் காணும்போது தமிழர் மகிழ்கின்றனர்.

தமிழ்நாட்டு அரசியல் அலுவலகங்களில் தமிழ் ஆட்சிமொழியாவதைத் தமிழருள் சிலரே வெறுக்கின்றனர் என அறிகின்ருேம். இவர்களைத்தான் பாரதி 'கூறத் தகாதவன் கூறினுன் கண்டீர்' எனக் காட்டினுர் போலும்.

தமிழ்நாட்டு அரசியல் ஒரு பக்கம் தமிழை வளர்ப்பதாக நின்ருலும் மத்திய அரசாங்கம் தமிழ்நாட்டில் பிறமொழி புகுத்துவதை மிகத் தீவிர செயலாக மேற்கொள்ளுகின்றது. தமிழ்நாட்டு வானெலியில் 'ஆகாச வாணி' அலறுகிறது. தமிழ்நாட்டு ஆவணத்தாளில் 'இந்தி' நம்மைப் பார்த்துச் சிரிக்கிறது. தமிழ்நாட்டுப் புகைவண்டி நிலையங்களிலும் அஞ்சல் அகங்களிலும் பிற அலுவலகங்களிலும் தமிழ் அல்லாத பிறமொழி ஆக்கம் செலுத்துகிறது. தமிழ்நாட்டில் புதைபொருள் ஆராய்ச்சியை மேற்கொண்டால் தமிழர் தொன்மையும் பண்பாடும் விளக்கமுறுமே என அஞ்சி அச்செயலைச் செய்வது தடுக்கப்படுகிறது. மொழி, பண்பாடு இவற்றின் வழி இந்த அவல நிலையென்ருல். அரசியல், வாணிபத் துறைகளில் தமிழ்நாட்டில் தமிழரல்லாதார் ஆதிக்கம் தலைவிரித்தாடுவதையும் அவ்வத்துறையில் வல்ல அறிஞர்கள் நன்கு விளக்கிக் காட்டுகிருர்கள். ஆம்! இந்த நிலையில் தமிழைப் பற்றித் - தமிழ்நாட்டைப் பற்றிப் பிறர் 'சிறு சொல்' சொல்வதோடமையாது 'சிறு செயல்' புரியவும் தலைப்பட்டுவிட்டனர். இந்த நிலையில் செழியர்கள் தேவையன்ருே!

தமிழருடைய அறவழி வேண்டுகோளும், பிற கூப்பாடுகளும்-ஏன். உயிர்த்தியாகங்களும்கூட நெடுந் தொலைவில் இருக்கும் மத்திய அரசாங்கத்துக்கு எட்டவில்லைபோலும். ஆகவே நெடுஞ்செழியர்கள் வஞ்சினங் கூறவேண்டிய நிலையில் நாடு இருக்கிறது. தன் வீட்டுவாயிலைத் தேடிவந்த மாற்றுவேந்தரை வஞ்சினங் கூறிவென்ருன் பாண்டியன் நெடுஞ்செழியன். பிறமண்ணில் தங்கள் ஆதிக்கத்தையும் மொழியையும், பிறவற்றையும் வளர்க்க எண்ணுதவன் தமிழன. எனிலும் தன் வீட்டிலேயே தனக்குத் தாழ்வு வரின் தளராது வஞ்சினங் கூறி வெற்றி காண்பவன் தமிழன். இந்த உண்மையைத்தான் தமிழக வரலாறு காட்டுகின்றது. அன்று இருதடை பின்வர ஒரு குடை நிழலில் நின்ற நலங்கிள்ளியின் போர் முழக்கம் தமிழர் தம் ஒன்றிய போர்முழக்கம் வடபுலத்தரசரைத் துஞ்சாக் கண்ணராக்கிற்று என உணர்கின்ருேம் (புறம்-31). இன்றும் அவர்கள உறக்கம் நீங்கிச் சற்று நிமிர்ந்து நம் வேண்டுகோளைக் கேட்கச் செய்யவேண்டும். போரன்றி அன்பு வழியில் தமிழர் அனைவரும் ஒன்றுகூடின் அனைத்தையும் பெறலாம். தமிழ்ச் சமுதாயம் இன்று விழித்துக்கொண்டுதான் இருக்கிறது. அதை ஒன்று திரட்டிச் செயலாற்றச் செழியர்கள் தாம் தேவை! வஞ்சினங் கூறிச் செயலாற்றும் செழியர்கள் தேவை! ஆம்! பாண்டி நாட்டுச் செழியன்போன்ற அஞ்சாத் திண்மையுடன் செயலாற்றிய வீரர், **இன்றைய பாண்டிநாட்டு நாவலர் பாரதியார் அவர்கள். அவர் நெடிது வாழ்க என வாழ்த்துகின்றேன்.** ★

நாவலர் வழக்குரைஞரானதும் எடுத்த தோற்றம்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 6 ‖ 8–8–'59 ‖ இதழ் 8

நீ அழுவதற்கென்றே பிறந்தவன்! அழு! அலறு!

கண்ணீர் வடித்துப் புலம்பாதே! கதறித் துடித்து அரற்றாதே! தரையிற் புரண்டு கலங்காதே! உனக்கு இனி யாரும் துணையில்லை! ஒன்றுமில்லை! ஒன்றுமில்லை! உனக்கென்று ஒன்றுமில்லை, சாவைத் தவிர!

"நான் தமிழனுயிற்றே! என் மூதாதையர் வீராதி வீரர்களாயிற்றே! அன்னார் ஆற்றிய அறச் செயல்களும் மறச் செயல்களும் ஆயிரமாயிரமாயிற்றே! என் முன்னோன் ஒருவன் சிங்கக் குலம்போல் பொங்கியெழுந்தானாமே! இமயத்தில் கொடி போட்டானாமே! அவனோடு பிறந்த ஒருவன் ஈழத்தைக் கொண்டானாமே! கால் தாழ்ந்து பணிந்த ஈழத்திலிருந்து கணக் கற்றோரைக் கொண்டு வந்து காவிரியில் அணை கட்டினானாமே! அவன் வழி வழி வந்தோர் தாமே நாங்கள்?" என்று கேட்கிறாய்!

அட ஏமாளியே! பழங் கதை பேசுவதிலோர் மகிமையில்லையடா! நீ இன்று தமிழனல்லடா! தேயிலைத் தோட்டக் கூலி! சிங்கள நாட்டுக்கு எங்கிருந்தோ போன அடிமை! உனக்குப் பெயர் தமிழனன்று. நீ இலங்கை மண்ணில் நெளியும் புழு; வாயில்லாப் பூச்சி; துணையில்லா ஏழை! உன்னைப்பற்றி முதலைக்கண்ணீர் வடிக்க, பிடித்த செங்கோலும் இனித்த பேச்சுமாய் நேருவோ காமராசரோ வருவார் என்று கருதுகிறாய்!

பகற்கனவுகளிலே மிதக்கின்ற பரிதாபம், நீ! உனக்கு நல்ல முன்னோடிகள் இருந்ததாக நீ ஏட்டிலும் பேச்சிலும் தாம் காணமுடியும். நடைமுறை உலகில் உனை நாடிவருவார் – துயர்துடைக்கத் தேடிவருவார் எவருமேயில்லை! நேரு பெருமானுக்கு எத்துணையோ வேலைகள். திருமதி மவுண்ட்பேட்டனுடன் கைகுலுக்கக்கூட நேரமில்லை, அவருக்கு. மவுண்ட்பேட்டன் மகளுடன் "பால்" ஆடக்கூடப் போதில்லை, அவருக்கு! மாம்பழத்தைச் சுவைக்கும் பேரரசியார் காலடியில் கிடந்து "காமன்வெல்த் பசனை" செய்வதற்கே நாளில்லை!

ஆனால் நீ அழுது புலம்புகிறாய்! "அன்றைக்குப் பேச வந்த பண்டிதர் அரசு இன்றைக்கும் பேசி இறுதியான ஒரு முடிவு காணக்கூடாதா?" என்கிறாய்! "அன்றைக்கே, போனால் போகிறதென்று வந்தோம். இன்று வேறு வரச் சொல்கிறாயா? உங்கள் பாடு; சிங்களவர் பாடு!" என்று சொல்லிவிட்டது பண்டிதர் ஆட்சி! இலங்கைக்கு வந்தபோதே "இந்தப் பிரச்னையைப் பேச நான் இங்கே வரவில்லை!" என்றாரே, ஆணவப் பண்டிதர்! பண்டிதர் நம்மவர் என்றால் இப்படிச் செய்திருப்பாரா? 1000 பேர்தான் பிரிட்டானியர் சூயசில் இருந்தனர். ஆனால் அவர்கள் உயிரும் உடமையும் தொல்லையில் இருக்கின்றன என்றதும் கொதித்தெழுந்ததே— இங்கிலாந்து அரசு, நீயும் உன் குடும்பத்தாருமாய் எட்டு இலட்சத்திற்கு மேல் வாடி வதங்கி வெளியேறுகின்றீர். ஆனாலும் தில்லி அரசு கவலைப்படுவதில்லை. ஏனென்றால் நீ நம்புவதுபோல் அது உன் அரசு இல்லை!

நிலை இப்படியே நீடித்தால் என்ன ஆகும்! இருந்தாலும் உன்னோடு சேர்ந்துகொண்டு தில்லிக்குச் சொல்கிறேன். தில்லி அரசே! அத்துணை பேரையும் எடுத்துக்கொள்ளச் செய், இலங்கையிடம் முயற்சி செய்து! "காமன்வெல்த் உறவு என்னுவது? இலங்கையோடு பகையா பாராட்டுவது?" என்று நினைக்கிறாய்? தில்லியரசே! இவர்கள் கண்ணீரைத் துடைக்காவிட்டால் உன் நிலை...அதோ, அழுத கண்ணீரும் சிந்திய மூக்குமாய் நிற்கின்ற எட்டு இலட்சம் பாட்டாளிகளைப் பார்! அவர்கள் ஒரு துளியல்ல; இரு துளியல்ல; எட்டு இலட்சம் பேர்! அவர்கட்குப் பின்னே நிற்பது 9 கோடிக்கு மேற்பட்ட திராவிடர் சமுதாயம்! இன்றில்லாவிட்டாலும் நாளையாகிலும்; நாளையின்றேல் நாளை மறுநாளாகிலும், தில்லியரசே! உன் முடி சரிந்தே தீரும்! இன்று, எட்டு இலட்சம் தமிழருக்கு இடமில்லை, என்ற நிலை! நாளையோ, நேரு உள்ளிட்ட 30 கோடி வடவருக்கு இடமில்லை; வாழ்வில்லை என்ற நிலை ஏற்பட்டுத்தான் ஆக வேண்டுமா? என்ன உன் பதில்? உடன் சொல்லுக!

எமது நல்லாசிரியர்

1931-ம் ஆண்டு ஜூன் திங்களில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலாக B. A. (Hons.) (Tamil Literature) தமிழ் பி. ஏ. ஆனர்ஸ் வகுப்பு தொடங்கப்பட்டது. யான் 1931-1934 வரை அங்குத் தமிழ் ஆனர்ஸ் வகுப்பில் படிக்கும் பேறுபெற்றேன். முதன் முதலாக தோற்றுவிக்கப்பட்ட அந்த வகுப்பில் நாங்கள் எழுவர் படித்தோம். அப்போது பேராசிரியர் விபுலானந்த அடிகள், திருவாளர். ஆர். பி. சேதுப்பிள்ளை, பண்டிதர். வேங்கடசாமி நாட்டார், திரு. சர்க்கரை இராமசாமிப் புலவர், திரு. பொன் ஓதுவார், திரு. கந்தசாமியார், திரு. எஸ். கே. கோவிந்தசாமிப் பிள்ளை என்ற எழுவர் எங்களுக்கு ஆசிரியப் பெருமக்களாக அமைந்தனர். பேரரசிரியர் விபுலானந்த அடிகள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைவிட்டு இலங்கைக்குச் சென்றதால் 1933-ம் ஆண்டில் பேராசிரியர் எஸ். சோமசுந்தர பாரதியார் M. A. B. L. அவர்கள் தமிழ்த்துறைத் தலைவராக நியமிக்கப்பட்டார். திரு. பாரதியார் அவர்கள் தமிழ்ப் பேராசிரியர் பொறுப்பினை ஏற்றபின்னர் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது என்று கூறுவேனாகில் அது புனைந்துரையாகாது. 1934-ம் ஆண்டில் மகாமகோபாத்தியாய பண்டிதமணி. மு. கதிரேசன் செட்டியார் அவர்களும் தமிழாசிரியராக நியமிக்கப்பட்டார். எங்கள் நல்வாய்ப்பால் நாங்கள் சிறந்த ஆசிரியர்களிடத்தில் படிக்கும் பேறு பெற்றோம்.

நாவலர் பாரதியார் அவர்களின் மலர்ந்த முகத்தினையும், ஏறுபோற் பீடு நடையினையும், அரிய பண்புகளையும் ஆங்கிலம் தமிழ் என்ற இரு மொழிப் புலமையினையும் கண்ட மாணவரும் ஆசிரியரும் அவரைப் பலபடியாகப் பாராட்டினர். வந்த சில நாட்களுக்குள் அவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் ஆட்சிக்குழுவில் (Syndicate) இடம்பெற்றார். அவரது தமிழ்ப் புலமையாலும் பேச்சுத் திறமையாலும் சட்டப் புலமையாலும் பல அரிய தமிழ்த்தொண்டு ஆற்றினார். அவரது அரிய முயற்சியின் பயனால் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் ஆராய்ச்சிக்கூடம் (Tamil Research Department) ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சித்துறைக்குப் பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்கள் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்த ஆராய்ச்சிப்பகுதியின் வாயிலாகப் பல அரிய தமிழ் நூல்கள் வெளிவந்துள்ளன என்பதைத் தமிழ்நாடு நன்கு அறியும்.

நாவலர் பாரதியார் அவர்கள் 'தொல்காப்பியப் பொருளதிகாரம்,' 'தமிழ் இலக்கிய வரலாறு' முதலிய பாடங்கள் பற்றி எங்களுக்கு அரிய சொற்பொழிவுகள் ஆற்றிவந்தனர். தொல்காப்பியம் மெய்ப்பாட்டில் உவமையியல் நடத்தும்போது பேராசிரியர் உரையிற் காணும் கருத்துக்களில் எவையெவை ஏற்றுக்கொள்ளத் தக்கன என்பதையும் எவை நம்மால் ஏற்றுக்கொள்ள இயலாதன என்பதையும் திட்டவட்டமாக எங்களுக்கு விளக்கினார். தொல்காப்பியப் பொருளதிகாரம் பற்றி வெளிவந்த ஆராய்ச்சி நூல்களில் எவ்வெக் கருத்துக்கள் பொருத்தமற்றன என்பதையும் எடுத்துக் காட்டினார். தமிழ் இலக்கிய வரலாறு பாடம் நடத்தும்போது கடைச் சங்க நூல்கள் பிற்காலத்தன எனச் சாதித்துத் தங்கள் மனம்போனபடி எழுதியும் பேசியும் வரும் சில ஆராய்ச்சியாளரின் போலிக் கூற்றுக்களையும் கருத்துக்களையும் எங்களுக்கு எடுத்துக் கூறி, ஆராய்ச்சி செய்யும்போது நடுவு நிலைமையுடன் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்பதை வற்புறுத்திக் கூறினார். பாரதியார் பல அரிய ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளனர். திருவள்ளுவர் குலத்தைப் பற்றி நன்கு ஆராய்ந்து பல இலக்கியச் சான்றுகள் காட்டித் திருவள்ளுவர் அரசருக்கு முரசு அறையும் வள்ளுவர் குலத்தவராக இருக்கலாம் என்ற அரிய கருத்தினைத் தமிழ்நாட்டிற்கு வழங்கிய பெருமை என் ஆசிரியப் பெருந்தகை நாவலர் பாரதியார் அவர்கட்கே உரியதாகும். நமது கருத்துக்களை நக்கீரர் போன்று அஞ்சாது கூறும் திறமையும் புலமையும் பெற்றவர் பாரதியார் என் பேனாகில் அது மிகையாகாது. அவரது அரிய நூல்களைத் தமிழ் மக்கள் படித்து பயன்பெறுவார்களாக. இன்னும் அவர் பன்னெடுங் காலம் சிறக்க வாழ்வதற்கு விழைகின்றேன். வளர்க அவர்தம் கருத்துக்கள்; வாழ்க அவர்தம் புகழ்.

–பூ. ஆலாலசுந்தரனார், எம். ஏ.
(தமிழ்த்துறைத் தலைவர், சென்னைக் கிறித்தவக் கல்லூரி.)

"தென்றல்" விற்பனையாளர்களுக்கு முக்கிய அறிவிப்பு.

ஜூலை மாதம் முடிய உள்ள பட்டியல் தொகை முழுவதும் ஆகஸ்ட் 15-ம் நாளுக்குள் அனுப்பிவைத்துவிட வேண்டும். தாமதம் செய்வோர்க்கு 22-8-59 "ஊமையன் கோட்டை" தொடக்க இதழ் கண்டிப்பாய் அனுப்பப்பட மாட்டாது.

பொறுப்பாளர்,
"தென்றல்".

எமது நல்லாசிரியர்

ஜெ.

பெரு நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார் அவர்கள்பால் நற்றமிழ் கற்கும் பேறு பெற்றவர்களில் நானும் ஒருவன். நான் 1933 முதல் 1935 வரை அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் எம். ஏ. வகுப்பிற் பயின்றுகொண்டிருந்தபோது பாரதியார் அவர்களுடைய அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியராய் இருந்த தலை மாணுக்கர்களில் நானும்ஒருவன் என்று கூறிக்கொள்வதிற் பெருமையுறுகிறேன். அவர் தமிழ்ப் பேராசிரியராக அப்பல்கலைக் கழகத்தில் ஆற்றிய பணியின் பயன் தமிழ்நாட்டு மூலை முடுக்குகளுக்கெல்லாம் இப்போது எட்டியுள்ளது. பாரதியார் அவர்கள் வெறுங் காசிற்காக வேலை பார்த்தவரல்லர். உண்மையிலேயே தம்முடைய தமிழ்ப் புலமையையும் தமிழ்ப் பற்றினையும் பயன்படுத்த வேண்டுமென்றும், பரப்ப வேண்டுமென்றும் கருதிய நோக்கத்தால் அவர் 1933 முதல் 1938 வரையிலும் அப்பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகவும் தமிழ்த்துறைத் தலைவராகவும் அமர்ந்திருந்து பெருந் தொண்டாற்றினர். தமிழ்ச் சிறப்பு வகுப்பு மாணவர்களுக்கு அவர் தமிழ் இலக்கிய வரலாறு, திருக்குறள், தொல்காப்பியம், கலித் தொகை போன்ற உயரிய பாடங்கள் எடுத்து நடத்தி மகிழ்வித்து அறிவுறுத்தினர். அவருடைய மாணவராக இருந்து பயனுற்ற பயிர் வாழையடி வாழை எனத் தமிழ் ஆர்வம் மிக்க மாணவர் குழாத்தினராய் அமைந்து உருவாகி உள்ளனர். பாரதியார் அவர்களிடமிருந்து நான் கற்றதை என்னிடமிருந்து திருவாளர்கள் நெடுஞ்செழியன், அன்பழகன், அ. ச. ஞானசம்பந்தம் போன்றவர்கள் கற்றுத் திறம்படப் பெருக்கித் தமிழ்நாடெங்கணும் வழங்கி வருவது பலர் அறிந்த செய்தி. பாரதியார் அவர்களுடைய ஐந்தாண்டு ஆசிரியத் தொழிலினல் உருவாக்கப்பட்ட தமிழ் எம். ஏ. வகுப்பு மாணவர்களும் தமிழ்ப் புலவர் வகுப்பு மாணவர்களும் இன்று பல்வேறு கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளும் ஆசிரியர்களாய்ப் பணியாற்றி வருவதோடு, ஆண்டுதோறும் பாரதியார் வழிவழியில் வரும் மாணவர் பலரை ஆங்காங்கு உருவாக்கிக் கொண்டுள்ளார்கள். அக்காரணத்தால், தமிழுக்கு இழிவும் அழிவும் வராமற் பாதுகாப்பதற்கு ஒரு பெரும்படை நம் நாட்டில் திரளும் என்பது எதிர்பார்க்கக்கூடியதுதானே ?

பாரதியார் அவர்கள் பாடங்களைக் கற்பிக்கும்பொழுது பாட்டிற்கு அல்லது சூத்திரத்திற்கு வெறும் பொருள் உரைத்தார் அல்லர். பாட்டிற்கும் சூத்திரத்திற்கும் எழுதப்பட்டு வழங்கி வரும் உரை மெய்தானு என்று ஆராய்ந்து முடிவுகூறும் பெற்றியராகவே எப்போதும் அவர் இருந்து வந்தார். அதனுல் "எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பது தெளிவாயிற்று. அவர் வகுப்புக்கள் நடத்தும்பொழுது ஆரியர் மரபு எது என்றும், தமிழர் மரபு எது என்றும் அடிக்கடி சுட்டிக்காட்டிச் செல்லுதல் வழக்கம். அவ்வாறு அவர் காட்டியவற்றுட் சிலவற்றை அடியிற் காணலாம்.

திருக்குறள் தமிழர்களுக்குரிய சிறப்பொழுக்க நூல் என்றும், தமிழர்களுடைய சிறப்பொழுக்கம் ஆரியர்களுடைய ஒழுக்கத்தினின்று வேறுபட்டது என்றும் அவர் பன்முறை விளக்கி எடுத்துரைத்ததோடு,

"நல்லாறு எனினும்
கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்ற திருக்குறளை எடுத்துக்காட்டி, இது ஆரிய மரபினின்று எத்துணை வேறுபட்டது என்று அவர் விளக்குவதுண்டு. ஓதுதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு வகைத் தொழில்களையும் அந்தணர்கள் உடையவர்கள் என்று ஆரிய வேதம் சொல்லும் என்றும், அதனின் வேருய மரபே தமிழ்மரபு என்றும் அவர் காட்டுவர். பொருளை ஈதல் ஆறு தொழில்களில் ஒன்ருக இருப்பதைப்போலப் பொருளை இரந்து கொள்ளுதலும் ஒரு தொழில் என்று ஆரிய மரபு கூறும். தமிழ்மரபு ஏற்றல் ஒவ்வாது, எவ்வாருயினும் தருதலே நல்லது என்று கூறுதற்கு எடுத்துக்காட்டாக,

நல்லாறு எனினும்
கொளல்தீது; மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்ற திருக்குறளைச் சான்ருகக் காட்டுவர்.

"ஆபத்துக்குப் பாபம் இல்லை" என்பது ஆரிய மரபு என்றும், அது தமிழ் மரபுக்கு ஒவ்வாது என்றும் அவர் அடிக்கடி எடுத்துக்காட்டுவது வழக்கம். மனைவியோ, மகனே, தந்தையோ பட்டினியாய் இருக்கும் பொழுது எந்தத் தீமையும் புரிந்து அவர்கள் வயிற்றுப்பசியை அகற்றலாம் என்று ஆரிய வேதம் கூறுவதாகவும். தமிழ்மறை அவ்வாறு சொல்லவில்லை என்பதைத் தக்க சான்றுகளோடும் அவர் எடுத்துக் காட்டுவது வழக்கம்.

"இன்றி அமையாச்
சிறப்பின ஆயினும்
குன்ற வருப விடல்"

என்ற திருக்குறளை எடுத்துக்காட்டி அதன் நுட்பத்தை விளக்குவார். ஏதாவதொரு பொருள் ஒருவருக்கு இன்றியமையாதது என்று தெளிவாகத் தெரிந்திருந்தாலுங்கூட, அதனைப் பெற்று வேட்கை தணிந்து வாழ்வதற்சாகத் தன்மானம் குன்றக் கூடிய செய்தியைத் தள்ளிவிடல் வேண்டுமென்ற இதன் பொருளை நன்கு விளக்குவதுண்டு. அதற்கு எடுத்துக் காட்டாக, கடும் பசியுற்ற போதும் பகைவர் கையில் தண்ணீர் பெற்று வேட்கை தணிந்து வாழ விரும்பாத தன்மானம் மிக்க வீரன் சேரன் செய்தியை அவர் கூறுவது உண்டு. அச்சேரன் தாடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறைஎன்பது புறநானூற்றுப் பாடலால் அறியப் படுவது.

ஒருவன் பழிபாவம் இயற்றியாவது உயிர் வாழ வேண்டுமென்று கூறும் பிறமொழி நூல்களினின்று எவ்வாறு திருக்குறள் வேறுபடுகிறது என்பதையும் நாவலர் நன்கு எடுத்துக் காட்டுவது வழக்கம்.

"மயிர்நீப்பின் வாழாக்
கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்"

என்ற திருக்குறளிற் கூறியவாறு ஒருவர் தன்மானத்தை இழக்க நேரிட்டால் உயிரை விட்டுவிடுதற்குத் துணிவாரென்ற குறட் கருத்தை எடுத்து விளக்கிய காரணத்தால், தன்மான உணர்ச்சியோடு இன்று நாட்டிற் பலர் வாழ்கிருர்கள் என்பது எண்ணத்தக்கது பழிபாவங்களை மாலைபோலாக்கி அணிந்துகொண்டு, உண்டாக்கப்படும் பெருஞ் செல்வத்தைக் காட்டிலும் நல்லவர்களுடைய பெரும் வறுமை மிகவும் சிறந்தது என்பதற்கு எடுத்துக்காட்டாக,

"பழிமலைந்து எழூதிய
ஆக்கத்தின் சான்ருேர்
கழிநல் குரவே தலை"

என்ற திருக்குறட்பாவினைத் தருதல் உண்டு. தமது வாழ்க்கையிலும்

டாக்டர்
அ. சிதம்பரநாதனர்,
எம். ஏ., எம். எல். சி.

இத்திருக்குறளின் கருத்துக்கேற்ப வாழ்ந்து காட்டிய பெருமை பாரதியார் அவர்களுக்கு உண்டு. பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டுத் தம்முடைய உயரிய குறிக்கோளகளை விட்டுவிடக்கூடாது என்ற நெஞ்சவுரத்தொடு அவர் வாழ்ந்தமையால், சில வேலைகளில் மிடிப்படாமலே அவர் மிடிப்பட்டதும் உண்டு.

1939 ல் சென்னை மாநிலத்தில் இந்தியைப் பள்ளிக்கூடக் கட்டாய மொழியாகத் திரு இராசகோபாலாச் சாரியார் புகுத்தியபொழுது, அதனைக் கண்டித்து அவருக்கு ஒரு வெளிப்படைக் கடிதத்தைப் பத்திரிகைகளில் வெளியிட்ட ஒரு பெருந் தொண்டிற்காகவேனும், தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அப்பெரியாருக்கு நன்றி செலுத்தும கடமை உடையர். அவ்வாறு அவர் அரசியலில் தலைப்பட்டுச் செயல் புரிந்தது தகாது எனக் கூறப்பட்டபொழுது, அவர் அண்ணுமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியர் நிலையினின்று விடுவித்துக்கொள்வதாக அஞ்சாமல் உரைத்தார் என்பதை ஒருவேளை இன்றுள்ள இளைஞர்கள் அறியாமல் இருத்தல் கூடும். அக்காலத்தில் அவருக்கு ஏற்பட்ட பல அல்லல்களுக்குக் குலையாமல் இடையூறுகளைப் பொடிபடுத்தி வெற்றியுற்ற மாபெரும் வீரர் நாவலர் சோமசுந்தர பாரதியார் என்று கூறுவது புனைந்துரை ஆகாது; பொருள் உரையே ஆகும்.

பாரதியார் அவர்கள் தமிழ் வாழவும், தமிழர்கள் சங்ககாலத் தமிழர்களுடைய சீரிய வாழ்க்கை எய்தவும், தமிழ்நாடு முன்னேறவும் அவர்தம் வாழ்நாட்களிற் செய்த பல தொண்டுகளை நினைவுகூரும் வகையால் இன்றுள்ள இளைஞர்கள் முன்னேறுதற்கு வழிகாண்பர் என்பது உறுதி.

நாவலர் பாரதியார் அவர்கள் இன்னும் பல்லாண்டு உடலுரத்துடனும் மனத்திட்பத்துடனும் வாழ்ந்து மேலும் பல தொண்டுகளுக்குத் தலைமை தாங்கவேண்டுமென்று விரும்பும் பலரில் நானும் ஒருவன் ★

நாவலர் கணக்காயர் டாக்டர்
ச. சோமசுந்தர பாரதியார்

அவர்களுக்கு,

மதுரையில் நடந்த எண்பதாவது ஆண்டு நிறைவு விழாவில் வாசித்தளித்த

வாழ்த்துப் பா

நீறுபூத்த நெருப்பாகத் தாய கத்தில்
நீள் தமிழைக் காத்திடவே நாளும் வாழ்ந்த
பேறுமிக உடையோய் நீ! தமிழ்நற் ருயின்
பெற்றியினைப் காத்திடவே வாழும் வீர!
வீறுடனே எதிர்த்தாயே அன்றே இந்தி,
விளைநிலமாம் பைந்தமிழில் புகுந்த போது!
சீருடனே செந்தமிழ்தான் வாழ நாளும்
செயல் புரிந்தோய்! தமிழ்போல வாழ்க நன்றே!

எண்பதாண்டு வாழ்ந்திடினும் இளைஞன் ஆனய்
இதயத்தே செந்தமிழைக் கொண்ட தாலே!
பண்பான தாயகத்தின் வீரா! என்றும்
பைந்தமிழே வாழ்ந்திடத்தான் வாழும் தீரா!
எண்ணத்தல் தாயகத்தின் இளைஞர் தமின்
உள்ளத்தில் வாழ்கின்ற எங்கள் தாத்தா!
மண்ணிதுதான் வாழும்நாள் வாழ வேண்டும்!
மரட்டும் தமிழ்நாடே! வாழ்க எம்மான்!

—மதுரை எழுத்தாளர் மன்றம்.



நாவலர்



நாவலர் பாரதியார் நற்றமிழ்த்தொண்டு

"தந்தை தாய்ப்பேண்" என்ற முறையில், ஒவ்வொருவனும் தன் தாய் மொழியையும் தாய் நாட்டையும் பேணக் கடமைப்பட்டவன். தாய்மொழியைப் பேணுதலாவது, அதிற் பற்று வைத்தலும் அதனை வளர்த்தலும் அழியாமற் காத்தலுமாம். சொல் வளப்படுத்தலும் இலக்கிய வளப்படுத்தலும் வளர்த்தலாகும். இலக்கிய வளப்படுத்தல் புலவர்க்கே இயல்வது; ஏனைய பொது மக்கட்கும் இயல்வன.

இற்றை யுலகில் தாய்மொழியைப் பேணுமைக்குத் தலை சிறந்தது தமிழ் நாடு. தாய்மொழியை ஒரு கட்சியொடு தொடர்புபடுத்துவதும், தாய் மொழியைத் தாழ்மொழியென்று தூற்றி, வேற்று மொழியைத் தேவ மொழியென்று போற்றுவதும், தாய் மொழியைப் பேணுவானுக்கு 'மொழி வெறியன்' என்று பட்டஞ் சூட்டுவதும், அவனை அலுவலனின்று அகற்றுவதும், தாய் மொழி யிசையும் தாய் மொழியில் வழிபாடும் தகாதன வென்று மேடையில் அமைச்சர் சாற்றுவதும், தாய் மொழிச் சொல்லை வேற்று மொழிச் சொற்கும் தாய் மொழியையே வேற்று மொழிக்கும் மாற்றுவதும், இத்தமிழ் நாட்டில் தான் நிகழும்.

இத்தகைய நிலையில், தமிழுக்கு அயலாரால் ஊறு நேர்ந்தவிடத்து அரிமாபோல் அஞ்சாமல் எதிர்ப்பாரும், காரியேறாத்துப்போல் காட்டிக் கொடுப்பாரும், இருதலை மணியன்களாய் இங்குமங்கும கலப்பாரும், 'எங்கெழிலென் ஞாயிறெமக்கு' என்று ஏதுமுணர்ச்சியற்றிருப்பாருமாய் தமிழாசிரியர் நால்வகையர். இவருள் நாவலர் பாரதியார் தலைவகையர் (முதல் வகுப்பார்).

1. மொழித்தொண்டு

இச்சென்னை மாகாணத்தில் திரு. இராசகோபாலாச்சாரியார் முதலமைச்சராகி முதன் முதல் கட்டாய இந்தியைப் புகுத்தியபோது, தாய் மொழியுணர்ச்சியுள்ள தமிழரிடையே பெருங் கொதிப்பெழுந்தது. அதனால் இந்தியெதிர்ப்பியக்கம் தோன்றிற்று. அதை எதிர்க்கட்சியார் செயலென எளிதாய் அடக்கி விடப் பார்த்தனர் ஆச்சாரியார். ஆயின், கட்சிச் சார்பற்ற தமிழ் மாணவரும் ஆசிரியரும் அதிற் பெருந்தொகையினராய்க் கலந்திருந்தனர். அவருக்கும் பிறருக்கும் பெருந்தலைவராய்ப் பிறங்கித் தோன்றிய பேராசிரியர் இருவரே. அவர் மறைமலையடிகளும் நாவலர் சோ. சு. பாரதியாரு[illegible]. இவ்விருவராலேயே இந்தி [illegible]ங்கம் வன்மை பெற்று [illegible]ண்டது எனின் மிகை

நாவலர் பாரதியார் கட்டாய இந்தி வெறுப்பினால், 'காங்கிரசு' என்னும் பேராயக் கட்சியினின்று விலகி, நாடு நகரெங்கும் சுற்றி, எண்ணிறந்த இந்தியெதிர்ப்புக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும் தலைமை தாங்கித் தமிழ் முழக்கஞ் செய்து, கட்டாய இந்தியின் முதுகந்தண்டை முறித்தார். அதன் பயனாகவே, ஆங்கிலேயர் மீண்டும் அதிகாரத்தைப் பெற்ற இடைக்கால ஆட்சியில், கட்டாய இந்தி கதுமென விலக்கப்பட்டது.

எடுப்பான வளர்த்தியும், ஏக்கழுத்தும், எழில்முகமும், வீறுபெற்ற மீசையும், ஏறு நச்சும் பீடுநடையும், மறலியும் அஞ்சும் தறுகட் பார்வையும் உடைய நாவலர் பாரதியார், இடியோசை கேட்ட நாகம்போல் எதிரிகள் நடுங்கி யொடுங்குமாறு, குமுறியஇந்தியெதிர்ப்பு மறமுழக்கம், கண்டார் கேட்டார் அகக்கண் முன்பும் அகச்செவியிலும் இன்னும் தொலைக்காட்சியும் தொலைபேசியும் போல், தோன்றிக்கொண்டும் ஒலித்துக்கொண்டும் இருக்கத்தான் செய்கின்றன.

2. இலக்கியத்தொண்டு

உரையாசிரியருள் நுண்மாண்நுழைபுலமுடையாரும் மண்மாண் புனைபாவையாகி மயங்குமாறு, உயரிய இலக்கணமான ஒல்காப் பெருமைத் தொல்காப்பியத்தின் மூவியல்கட்கு முன்னரே உரைகண்ட உளம்பூரணரான இளம்பூரணரும் உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும், கூராசிரியரான பேராசிரியரும், பிறரும், காணமுடியாத காழுரையை நம் நாவலர் பாரதியார் கண்டார். அவ்வுரைக்கு ஒரரிசிப் பதமாக உள்ள ஓர் எடுத்துக் காட்டு வருமாறு:—

"கொடிநிலை கந்தழி
வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின்
முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு
கண்ணிய வருமே"

என்பது ஒரு தொல்காப்பியப் புறத்திணையியல் நூற்பா (33).

இதில், குறிக்கப்பெற்ற கொடிநிலை, கந்தழி. வள்ளி என்னும் புறத்துறைகட்கு, புறப் பொருள் வெண்பா மாலை ஆசிரியராகிய ஐயனாரிதனார் பின்வருமாறுபொருள் கொண்டார்.

கொடிநிலை

"மூவர் கொடியுளும்
ஒன்றொடு பொரீஇ
மேவரு மன்னவன்
கொடிபுகழ்ந் தன்று"

"இதன் பொருள்: அரி அயன் அரன் என்னும் மூவர் கொடியுள்ளும் ஒன்றோடு வமித்துப் பலரும் பொருந்துதல் வரும் வேந்தனுடைய கொடியைப் புகழ்ந்தது"

கந்தழி

"சூழு நேமியான்
சோவெறிந்த
வீழாச்சீர் விறன்மிகுத்தன்று,"

இ-ள். வளைந்த சக்கரப் படையையுடைய கண்ணன், வாணசுரனது சோ என்னும் மதிலரணை அழித்த கெடாத தன்மையையுடைய வெற்றியைச் சிறப்பித்தது.

வள்ளி

"பூண்முலையார்
மனமுருக
வேன்முருகற்கு
வெறியாடின்று."

இ-ள். அணிகலத்தாற் சிறந்த மார்பையுடைய பெண்டிர், மனம் நெகிழ வேலினையுடைய முருகனுக்கு வெறியென்னுங் கூத்தை ஆடியது.

இனி, நச்சினார்க்கினியர் மேற்கூறிய நூற்பாவிற்கு உரைத்த கண்ணழித்துரை வருமாறு:—

"கொடிநிலை - கீழ்த் திசைக் கண்ணே நிலைபெற்றுத் தோன்றும் வெஞ்சுடர் மண்டிலம் (கதிரவன்), கந்தழி - ஒரு பற்றுக்கோடின்றி அருவாகித் தானே நிற்குந் தத்துவங் கடந்த பொருள், வள்ளி - தண்கதிர் மண்டிலம் (திங்கள்), என்ற வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும் - என்று சொல்லப்பட்ட குற்றந் தீர்ந்த சிறப்பினையுடைய முற்கூறப்பட்ட மூன்று தெய்வமும், கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே - முற்கூறிய அமரரோடே கருதுமாற்றால் தோன்றும்."

இனி, தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி, ஆசிரியர் மு. இராகவையங்கார் அவர்களின் தனி விளக்கம் வருமாறு:—

"இச்சூத்திரத்திற்கு என் கருத்திற்றோன்றிய சில கருத்தையும் அறிஞர் ஈண்டே ஆராய்ந்துகொள்ளக்கடவர். அஃதாவது தெய்வப் புலமைத் திருவள்ளுவர், தம் பெருநூற்றொடக்கத்தே கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் என்ற நான்கதிகாரங்களைப் பாயிரமாகத் தனியே நிறுத்திக் கூறுகின்றாரன்றே? 'ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளும்-பாயிரத்தினோடு பகர்ந்ததற்பின்' என்று சங்கப் புலவர் ஒருவர் இவற்றை வேறு பிரித்துக் கூறுதலுங் காண்க. இங்ஙனம் இந்நான்கதிகாரங்களைமட்டும் பாயிரமாக வள்ளுவர் தனியே கொண்டது எக்காரணம் பற்றி? என்ற கேள்வி நெடுக நிகழ்ந்து வருவது உண்டு, இதற்குத் தக்க விடை இதுகாறும் பெறப்பட்டதாகத் தெரிந்திலேம். ஆயின், தொல்காப்பியனார் கூறிய "கொடிநிலை கந்தழி" என்ற இச்சூத்திரம் அக்கேள்விக்கு விடை தரவல்லதோ என்பது எமக்குள் நெடு நாள் நிகழ்ந்து வரும் ஆராய்ச்சியாகும். அஃதாவது-இச்சூத்திரத்திற் கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்தொடு வரும் என, உயிர்பின்வழிவரும் ஒருவினையொடுச் சொல்லைக் கடவுள் வாழ்த்துக்குக் கூறுதலால், அவ்வாழ்த்து முதலிற் கூறுஞ் சிறப்புடையதென்பதும், மற்றவை அதன் பின்னர் வைத்து வாழ்த்தப்படுதற்கு உரியவென்பதும் அரியத்தக்கன. இனிக் 'கொடி நிலை' என்பது மேகத்தை யுணர்த்தும்; கீழ்த்திசைக் கண்ணே நிலை பெறுதலுடையது, நீடனிலையுடையது என்பன இதன் பொருளாம்

— 12-ம் பக்கம் —

பாவாணர்

இந்தி கட்டாயப் பாடமா?

நாவலர் சோமசுந்தர பாரதியார்

★ இது, சென்னை முன்னுள் முதன் மந்திரி கனம் ச. இராசகோபாலாச்சாரியார், பி. ஏ., பி. எல். அவர்களுக்கு, ச. சோமசுந்தர பாரதியார், எம். ஏ., பி. எல். அவர்களால் 25-10-'37-ல் அனுப்பப் பெற்ற வெளிப்படைக் கடிதத்தின் தமிழ் மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி.

அறிவு மேம்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும், ஏற்றனவும் மிகவுந் திருந்தியனவுமான ஒரு மொழியினையுடைய மக்கள் தலையில் புதுமொழியொன்றைச் சுமத்த முயல்வதில் நேரிடக்கூடிய இயற்கையான குற்றபாடுகளைப் பொது மொழியொன்று அமைக்கும் முனைப்பில் மறந்துவிடக் கூடாது. இந்தி மொழியை ஆதரிப்பவர்கள் இரண்டு வகையான துன்பங்களுக்கு ஈடு கொடுக்கவும் நேரிடும். ஒன்று மக்களாய்ப் பிறந்த எல்லாருக்கும் பொதுவாக உரியது; மற்றொன்று திராவிடர்களுக்கு. அதிலும் தமிழர்களுக்குச் சிறப்பாக உரியது. பேபெல் கோபுரக் (Tower of Babel) கதையும் உண்மையான ஒரு மனித மெய்ப் பொருளியல்பையே உணர்த்துவதாகும். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த பல கிளை மக்களுக்கும் எக்காலத்திலும் ஒரே மொழி ஏற்றதாக இருத்தல் இயலாது. தன்னுடைய பண்டைய நிலையிலிருந்து விடுபட்டோ, சமுகக் கொள்கைகள் மரபுகள் முதலியவற்றை மீறியோ ஒரு கூட்டம் முன்னேறிவிட்டால் அது அவ்வப்போது கலைத்துறையிலும் இன (சமுதாய) முறையிலும் வளர்ச்சியுறுவதற்கு ஏற்றவாறு மாறுதலடைந்து பலவகையாகப் பிரிந்துபடுவதியற்கையே. இதுவே மொழியில் வேறுபாடு என்னும் ஒழுங்குமுறை (நியதி) யாகும். ஆரிய மொழியிலும் அதனினமான இண்டோ-ஐரோப்பிய மொழிகளிலும் பிரிவுகள் பல அவ்வப்போது உண்டாகிக்கொண்டே வருவதும், இந்தியாவிலுள்ள சமஸ்கிருத மொழியிலிருந்து பல கிளை மொழிகள் தோன்றியதும், ஐரோப்பாவில் ஜெர்மன் மொழியிலிருந்தும் இலத்தீன் மொழியிலிருந்தும் பல கிளை மொழிகள் உண்டானதும், ஒவ்வொரு கிளை மொழியும் தன்னைப் பேசுவோரையன்றி மற்றுந் தன்னினமான பிற கிளை மொழிகளினராலும் அறியப்படாமலிருப்பதும், செமிட்டிக் (Semetic) தொதியிருந்து ஈபுரு (Hebrew) மொழியும் அதனிற் பலவகையில் மாறுபட்ட அராபிய (Arabic) மொழியும் உண்டானமையும் எடுத்துக் காட்டுகளாம். இந்தியாவின் தென் கோடியிலிருக்கும் திராவிட மக்களும் இந்த ஒழுங்கு முறையில் (நியதியில்) இருந்து தப்பமுடியாமல் தத்தம் தாய் மொழியிற் பல கிளை மொழிகளையும் உட்கிளை மொழிகளையும் உடையவரானார்கள் என்பது எல்லாரும் அறிந்ததே. எனவே, அரசியலாட்சி படைத்த எவரும் திராவிட மொழியினத்தைச் சேர்ந்த ஒரு மொழியைத் திராவிட மக்கள் எல்லாரிடையும் வற்புறுத்திப் பரப்பக் கனவிலும் கருத மாட்டார்கள். ஒரு மூலப் பொது மொழியைச் சேர்ந்த பல கிளையினராலும் பேசப்பட்டு வந்த ஒரு மொழி விரைவில் வழக்கிழந்து மாய்வதும், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றவாறு புதிய பல மாறுதல்களை யேற்றுத் தனிக் கிளைகளாக மாறுவதும் இயற்கையேயாகும். ஐந்நூறு ஆண்டுகள்கூட நிறைவு பெறாத இந்தி மொழிக்கு இதற்குள்ளாகவே பதினொரு கிளை மொழிகள் உள்ளன. இப்பதினொன்றும் மூன்று தனிப்பட்ட உண்ணாட்டு மொழிகளாகப் பிரிவுபடுவனவாம். இவை ஒவ்வொன்றும் மற்ற இரண்டு கிளை மொழிகளைப் பேசும் பொதுமக்களாலே பொருளுணரப்படுவதில்லையென்று மொழி வல்லுனர் கூறுகின்றனர். எனவே, செம்மையுறாததும், இலக்கிய வளமில்லாததுமான இந்திமொழியையோ அதன் கிளை மொழிகளையோ இந்தியப் பெருநாட்டிலுள்ள பற்பல வகுப்பு மக்களுக்கும் பொது மொழியாக்கிவிட முயல்வது என்பது எருமடைக்கு நீர் பாய்ச்சுவதை யொக்கும். இதிங்வ் வாருக, இந்தியாவிலுள்ள பல வகுப்பினர்களுக்கும், அதிலும் சமஸ்கிருதம், கிரேக்கம் போன்ற உயர் தனிச் செம்மொழிகளிலுள்ள இலக்கியப் பொருட்களஞ்சியத்திற்கு இணையான இலக்கியப் பொருட் களஞ்சியத்தையுடைய தமிழ், தெலுங்கு, வங்காளி போன்ற திருந்திய வளர்ச்சியுற்ற மொழிகளைப் பேசும் மக்களுக்குக் கட்டாய பாடமாக ஆக்க எடுக்கும் முயற்சிக்குக் கடுமையான எதிர்ப்பில்லாமலிருக்கும் என்று எண்ணவுங் கூடுமோ?

பெருநாடுகளிலும், நாளுக்கு நாள் வளர்ச்சியுற்றுவரும் இனத்தாரி (சமூகங்களி)டையும் பலதிறப்பட்ட உண்ணாட்டு மொழிகள் வழங்குவதியற்கையே. இப்பொதுக்காரணம் ஒருபுறமிருக்க, தென்னிந்தியாவில் ஏன் இந்தியைக் கட்டாய பாடமாக்கக் கூடாதென்பதற்குச் சிறப்பான காரணமுமுண்டு. வகுப்பு வேற்றுமையும் கலை வேற்றுமையுமில்லாத இடங்களிற்கூட ஒரு வகுப்பினரால் வழங்கப்பட்டு வரும் ஒரு மொழி வளர்ச்சி முறை காரணமாகவே பிரிவுபட்டுப் பல்வேறு கிளைமொழிகளாய்ப் பல்குவதுண்டு. உண்மையிவ்வாறாக, பல நூற்றுண்டுகளாகவும், பல ஊழி காலங்களாகவும், இனத்திலும் கூட்டுறவு முறையிலும் கலைவளர்ச்சித் தன்மையிலும், வரலாற்றுண்மையிலும், இதர வகுப்பினர் ஆகியோருக்கும் தமிழர்க்கும் இடையே மாற்றொணா வேற்றுமைகள் பல வளர்ந்துள்ள ஒரு நிலையில் ஒருவர் மொழியை மற்றொருவர்மீது வலுவிற் புகுத்தக் கருதுவது இயற்கைக்கும் நெறிமுறைக்கும் மாறானதொன்றாகும்.

தங்களுடன் வாழும் ஆரியர்களுடன் தமிழர்களுக்கு எத்தகைய மாறுபாடும் இல்லையென்று நிலைநிறுத்துவது பூசி மெழுகுவதேயாகும். ஆரிய மயமான வடவிந்திய வகுப்பினர்களும் தென்னிந்திய திராவிட வகுப்பினர்களும் பல நூற்றுண்டுகளாக ஒருவரோடொருவர் நெருங்கிய தொடர்பின்றியும் மாறுபாடுகள் பலவற்றுடனுமே வாழ்ந்து வந்துள்ளார்கள். இது ஒருபுறமிருக்க, மற்றொருபுறத்தில் தென்னிந்தியப் பார்ப்பனர்கள் தாங்கள் ஏதோ ஒரு சிறந்த வகுப்பினர்கள் என்றும், தனிப்பட்ட நாகரிகமுடையவர்கள் என்றும் கருதிக்கொண்டு அக்கருத்தை வெளிப்படையாகவும் வளர்த்து வருகின்றனர். வைணவ மதத்தின் பெயரால் எல்லா வகுப்பினர்களையும் ஒன்றுபடுத்திவிடலாம் என்று பேராசிரியர் திரு. இராமானுசர் எவ்வளவோ முயன்றார்; ஆனாலும், அம்முயற்சிகளெல்லாம் அவருடைய ஆரிய வெறிபிடித்த வடகலைச் சீடர்களால் மட்டுப்படுத்தப்பட்டுத் தாக்கப்பட்டன. உயிர் நெறியிலுங், கலைத் துறையிலும், மொழிச் சிறப்பிலும் வடமொழிக்குத் தாழ்ந்ததே தென்மொழியாகிய தமிழ் என்று வலிந்து வாதாடவும் அச்சீடர்கள் வெட்கினாரல்லர். தமிழர்கள் எத்துணையோ பரந்த நோக்கமுடையவர்கள், ஒற்றுமைத் தன்மையுடையவர்கள்; அவ்வாறிருந்தும் ஆரியர்கள் என்று தங்களைத் தாமே கருதி மனப்பால் குடித்துவரும் ஒரு சாரார் ஆரியர்களுக்கும் தமிழர்களுக்கும் இடையேயுள்ள மாறுபாடுகளை வளர்த்துப் பெருக்கிக்கொண்டே வருகிறார்கள். மறுக்கொணாத இத்தகைய உண்மைகளுக்கு எதிரிடையாகத் தென்னிந்தியாவிற் கலை வேற்றுமையோ வகுப்பு வேற்றுமையோ இல்லையென்று நாட்ட முயல்வது ஏய்ப்பு வித்தையேயாகும். மிக அண்மையில் உருப்பெற்றதும், நன்றாக இன்னும் வளர்ச்சியுறாததுமாகிய இந்தியைப் போன்ற ஆரியச் சிதைவு மொழியொன்று தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு எக்காலத்திலும் ஏற்புடையதாகாது. எனவே, தமிழ் மக்கள் தலையில் இந்திச் சுமையை ஏற்ற முயல்வது அவர்களை மனங் கசந்து வயிறெரிந்து வெறுப்புண்டாகச் செய்வதைத் தவிர வேறொன்றுஞ் செய்துவிடாது.

இந்திமொழி 17 கோடி இந்திய மக்களுக்கு இப்பொழுதே பொது மொழியாக இருந்து வருகின்றது என்று கூறுவது ஒரு முழுப் புரட்டேயாகும். அதைக் கேட்டாலும் நகைப்பேயுண்டாகும். அப்புரட்டை வெளிப்படுத்துவதும் பெரிய காரியமன்று. துளசிதாசர் தம் இராமாயணத்தை எழுதியுள்ள இந்தியே மைதிலி எனப்படும் மொழியாகும். அம்மொழியோ தான் பயின்று வரும் சில மாவட்டங்களை யொழித்துப் பிற இடங்களிற் பேசப்படுவதில்லை. வட இந்தியப் பிரிவுகளாகிய வங்காளம், பஞ்சாப், குசராத், பம்பாய் போன்ற பகுதிகளிலுள்ள பொதுமக்களால் அஃதறியப்படுவதில்லை. அம்மொழிக்கு இலக்கண அமைப்புங் கிடையாது. அவ்வப்போது மாநாடுகள் கூட்டி அதற்கு இலக்கணம் வகுத்தமைக்க இப்பொழுதுதான் முயன்று வருகிறார்கள். ஆகவே, அம்மொழி இன்னும் சரிவரத் திருத்தமுறாத ஒரு புது மொழியாகவே இருந்துவருகிறது. திருந்திய கலை நிரம்பப்பெற்ற மொழிகளைத் தாய்மொழிகளாகவுடைய பிற மொழி வகுப்பினர்கள் அதனை உவந்தேற்றுக்கொள்ளக்கூடிய அருமையோ பெருமையோ யாதொன்றும் அம்மொழிக்கு இல்லை. தமிழைப் போன்று மிகவும் செம்மையுற்றதும் வளம் நிறைந்ததுமான ஒரு மொழிக்கோ. மைதிலி என்னும் அம்மொழியாற் கிடைக்கக்கூடிய பயன் ஒரு சிறிதும் இல்லை. இந்தியைப் பார்க்கினும் மொழித்திறம் வாய்ந்தனவும், இலக்கிய வளம் உள்ளனவும், பயிலும் மக்கள் தொகை மிகுதியுள்ளனவுமான நாட்டுமொழிகள் இந்தியாவில் இன்னும் பற்பலவுள. இந்தியைவிட உருதுமொழி எழில் மிகுந்ததொரு மொழியென்பதற்கும், மிகுதியான தொகையினரால் பேசப்பட்டுவருகிறதென்பதற்கும் ஐயமே இல்லை. அவ்வாறிருந்தும், அம்மொழியை இந்தியப் பொதுமொழியாக்கிவிட வேண்டுமென்று எவரும் இதுவரையிற் கூ[illegible] வில்லை. அவ்வாறிருக்க, [illegible] மட்டும் தமிழ்மக்கள த[illegible] சுமத்திவிடப் பரபரப்[illegible] குரிய நெருக்கடியோ[illegible] யோ ஏதாவது இரு[illegible]



நாவலரின் புதல்வர் திரு. இலக்குமிரதன்பாரதி அவர்களும், அவர் மனைவியாரும்.

தொல்காப்பியச் சுவை

8. உவமத்தின் இயல்பு.

இராம. இராமநாதன் பி.ஏ. (ஆனர்சு)

தொல்காப்பியரது இலக்கண நூல் எடுத்துரைக்கும் எல்லாப் பொருள்களும் ஏற்றதொரு விளக்கத்தோடு தான் மிளிரும். பொருளற்ற - சுவையற்ற செய்திகள் இடம் பெறுதலில்லை. கூறுவன அனைத்தும் மக்களுக்குப் புரிந்த வகையில் தெரிந்த பொருள்களைக் கொண்டு விளக்கப்படுகின்றன. அவ்வாறு கூறப்பெறும் செய்திகளில் ஒன்றுதான் "உவமையியல்" ஆகும்.

அறிவே பரவாத பகுதியில் வாழுபவன் ஒருவன். அவன் அறிந்த ஒன்று காட்டெருமைதான். ஆசிரியர் அவனுக்குப் 'பசு'வைப் பற்றி விளக்க வேண்டும். அந்நிலையில் "காட்டெருமையைப் போன்றது பசு" என்று கூறுவதன்மூலம் அறியாதவன் பசுவினை ஒருவாறு அறியமுடிகின்றது. இங்கு உவமையாகக் காட்டில் வாழும் எருமை வருகிறது. வந்து நாட்டில் வாழும் பசுவை விளக்குகிறது. எருமையை உவமை என்று கூறுவர்.

இவ்வாறு இயர்பப்பெறும் உவமைகள் நான்கே வகைப்படும். தொழில் காரணமாகவும், பயன் காரணமாகவும், வடிவு காரணமாகவும், நிறம் காரணமாகவும் உவமை தோன்றும் என்கிறார். இதில் சிறப்பு என்னவென்றால் இவ்வுவமைகளின் பல கண்ணுக்குத் தெரிந்தும், சில கண்ணுக்குப் புலப்படாமல் செவியாலோ, நாவாலோ, மூக்காலோ, மெய்யாலோ, மனத்தாலோ அறியப்படும் என்கிறார்.

"புலிபோலப் பாய்ந்தான்" - என்பதில் நாம் கண்ணுல் காணும்தொழில் உவமை காணப்படுகிறது.

"தீப்போலச் சுடும்" என்பது மெய்யால் அறியப்படுகிறது. இதேபோல பிறவும் உணரக்கூடும். இதனையே தொல்காப்பியர் கூறுகிறார்:

"வினைபயன் மெய்யுரு
என்ற நான்கே
வகைபெற வந்த
உவமைத் தோற்றம்"
(தொல்-272)

திருவள்ளுவர் தொல்காப்பியம் பயின்ற காரணத்தால் "உயர்ந்த பொருளிலே கருத்தைச் செலுத்த வேண்டும்" என்ற கருத்தை வலியுறுத்துகிறார்.

"உயர்ந்ததன் மேற்றே
உள்ளுங் காலே"
—(தொல் - 274.)

என்பது தொல்காப்பியச் சூத்திரமாகும். உவமைகளைச் சொல்லும் போது உயர்ந்த பொருளைக்கொண்டு விளக்க வேண்டும்.

"அறிஞர் அண்ணுபோன்ற பேச்சாளர்" - என்பதுபோல் வருதல் வேண்டும்.

இந்த உவமைகள் நான்கும் தோன்றக்கூடிய நிலைக்களங்கள் - சிறப்பு - நலம் - காதல் - வலி ஆகும். இவையும் உயர்ந்த பொருளோடுதான் உவமித்தல் முறையாகும்.

"கண்ணின் கருமணி போன்ற [illegible]**பன்"** என்றால் 'காதல்'பற்றி [illegible] வமையாகும்.

[illegible]களில் உவமைக்கு [illegible]ர்ளப்பட்ட பொருள்கள் சிறப்புக் குறைந்தும் வருதல் உண்டு. இது சிறுபான்மையேயாகும்.

"கண்ணைப்போன்ற மலர்" - என்றால் "மலர்" சிறப்புக் குறைந்தும் "கண்" மிக்க சிறப்பைப் பெறுவதும் சிறுபான்மையே வருவதாகும்.

உவமைகளில் 'எடுத்துக்காட்டு உவமம்' என்று ஒன்றுண்டு. நாம் எடுத்துக்கூறும் பொருளுக்கு உவமை இது என்று விளக்கிக் கூறாது உய்த்துணருமாறு விடல்.

"கயல் விழியாள்"—என்றால் கயலை (மீனை)ப் போன்ற விழியை உடையவள் என்று பொருள். இங்கு 'போன்றது' என்ற சொல் வாராமை காண்க.

பொருள்களும் உவமையும் மாறி வருதலும் உண்டு. அவை சில வேளைகளில் பொருளுக்குச் சிறப்பு மிகுதிப் படுத்த சிறுமையுடைய உவமையைப் பயன்படுத்துதலும் தவறல்ல என்பது தொல்காப்பியம்.

"பெருமையுஞ் சிறுமையுஞ்
சிறப்பின் தீராக்
குறிப்பின் வருஉ
நெறிப்பா டுடைய."
(தொல்-281.)

இன்ன இன்ன உவம உருபுகள் மேற்கூறப் பெற்ற "வினை - பயன் - மெய் - உரு" ஆகிய உவமைகளை விளக்க வரும் என்று 32 உருபுகளைக் கூறுகிறார். இங்குத்தான் தொல்காப்பியரின் உலகியல் அறிவு தெளிவாகத் தெரிகின்றது பல்வேறு பகுதிகளிலும் நன்கு சுற்றி ஆராய்ந்த செய்திகளையும், கூற்றுக்களையும் மனத்திற் கொண்டு குறிப்பிட்ட உவமைகளைக் கூறுதற்குக் குறிப்பிட்ட உவம உருபுகளையே பயன்படுத்துதல் வேண்டும் என்று வரையறை செய்வது போற்றக்கூடியது.

மேலே உவமைகள் நான்கேவகை என்றாலும் அவைஎட்டாகவும் எடுத்துக் கூறுதலும் உண்டு என்கிறார். அவற்றின் மூலம் நான்கு தான். ஆனால் அவற்றினை விரித்தால் எட்டுப் பிரிவுகள் காணலாம் என்பதை

"நாலிரண் டாகும்
பாலுமா ருண்டே"
(தொல் - 289.)

என்று விளக்குகிறார்.

வினை உவமை - வினையாகவும் வினைக் குறிப்பாகவும் ஆகும்.

பயன் உவமை - நன்மையைக் குறிக்கவும், தீமையைக் குறிக்கவும் வரும்.

மெய் உவமை - வடிவைக் குறிக்கவும், அளவைக் குறிக்கவும் வரும்.

உருஉவமை-நிறத்தைப் பேசவும், குணத்தைப் பேசவும் வரும்.

ஆயினும் இவற்றின் அடிப்படை நான்கே ஆகும்.

தொல்காப்பியர் உளநூற் புலவர் என்பதை முன்னையக் கட்டுரைகளில் வலியுறுத்திக் கூறியுள்ளேன். அதற்கு மேலும் ஒரு சான்று இங்கும் கிடைக்கிறது. உவமைப் பொருளைக்கொண்டு (உவமிக்கப் படும்) குறிக்கப்பட்ட விளங்காப் பொருளை உளக் கூறுபாடு உள்ளமையால் உணர முடிகின்றது என்கிறார்.

"உவமப் பொருளின்
உற்ற துணருந்
தெளிமருங் குளவே
திறத்திய லான"
(தொல் - இளம் - 291)

எனவே உவமையைக் கூறிவிட்டாலும் சில பொருள்கள் சிலருக்கு விளங்கவில்லை என்றால் உளநூல் அறிவு வேண்டும் என்பது பொருள்.

பாம்பானது நெளிந்து நெளிந்து ஓடுகின்றது, இதனைக் கண்ணால் காணமுடியும். காவிரி ஆறானது நெளிந்து வளைந்து ஓடுகிறது. ஆனால் அதனைச் சுற்றிச் சுற்றிப் பார்த்து வர அனைவராலும் முடியாது பாம்பு வளைந்து நெளிந்து ஓடும் இயல்பைக் கண்ட கவிஞர் ஒருவர் காவிரியையும் கருத்திற்கொண்டு கூறுகிறார்.

"புற்றில் இருந்தே
புறப்பட்ட பாம்பதுதான்
சுற்றி வளைந்தோடும்
தோற்றம்போல்-இத்தரையில்
நீ வளைந்தே செல்கின்றாய்......"

என்ன அழகான உவமை! பொருளும் - சுவையும் பொதிந்து மிளிர்கின்றது. இதுபோன்ற சிறந்த உவமைகளை உருவாக்கும் பெருங்கவிஞர் பலர் பெட்டிப் பாம்பாய் வாழ்கின்றனர். தட்டி எழுப்பும் தமிழ்ச் சுவைதாம் அவர்களை நாட்டிற்கு காட்ட வேண்டும்.

உவமை கூற வேண்டுமே என்ற கட்டுப்பாடு காரணமாக உலகோர் அறியாத - புரியாத பொருள்களைக் கொண்டு கூறக்கூடாது. அவ்வாறு கூறுதல் அறிவுடைமை ஆகாது.

தலைவனும் - தலைவியும் உவமைகள் மூலம் கருத்தறிதல் உண்டு. ஆனால் சிறு விலக்கும் உண்டு. தலைவி கூறும் உவமைகள் அவள் அறிந்த குறிப்பிட்ட சில பொருள்களையே அடிப்படையாகக் கொண்டு வரும். ஆனால் தலைவன் கூறுவன நிலங்கடந்த பெரும் பொருள்களைக் கூட அடிப்படையாகக் கொண்டு வருதல் உண்டு என்கிறார்.

ஆனால் ஓர் உவமைக்கு விளக்கம் தருதற்கு வேறோர் உவமையை உரைத்தல் ஒவ்வாது. காரணம்: உவமையே விளங்காத பொருளை விளக்க வந்த, தெரிந்த பொருளல்லவா? தெரியாதவை உவமைகளாக வருதல் பொருந்தாது.

எனவே 'உவமை' கூறி விளக்கும் பொருளின் இயல்பை உளநூல் அறிவுடையார் எளிதின் உணரும் ஆற்றலுடையவர் என்பதும், உவமைகள்மூலம் அறியாதவை பலவற்றை எளிதாக அறியக்கூடும் என்பதும் 'உவம இயலின்'மூலம் உய்த்துணருகிறோம்.

★

அடுத்த கிழமை...
"மெய்ப்பாடும் உவமமும்"

பசுமலையார் வாழ்க!

புதுவையிலே பாரதியின் முழக்கம் அன்று
புத்தின்பத் தமிழகத்தின் புரட்சி ஒட்டம்;
வதுவையிலே மணப்பெண்ணை வாழ்த்தற் போலே
வாழ்த்திடுவோம் பசுமலையார் வாழ்ந்த நாளை;
எதுவரினும் வரட்டும்தான்; தமிழுக் காக
எதுதரினும் தருவேன் நான்; என்று அன்று
உதறிட்டார் பதவிகளை; தமிழர் வாழ்வே
என்வாழ்வு என்றிட்டார்; வாழ்க அன்னர்!

நெடுஞ்செழியன் ஆசானுக்(கு) ஆசான்; நல்ல
நீதிக்கு வாழ்வளிக்கும் நேசன்; இன்று
கடமையினில் கண்ணியத்தைச் சேர்க்கும் அண்ணு
கருத்துக்கு ஒத்தவர்தான்; தெற்கில் அன்று
தொடுத்திட்ட மொழிப்போரில் தலையாய் நின்று;
தறுக்கர்களின் வாயடக்கச் சிறையும் சென்றார்...
அடுக்காக எண்பத்து ஆண்டைத் தாண்டி,
இருக்கட்டும்; வாழட்டும்; ஆசை அஃதே!

—பனப்பாக்கம் கு. சீத்தா.

நாவலர் வாழ்வு!

"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்கு ஏற்ப, நாவலர், கணக்காயர், டாக்டர் என்ற பட்டங்களைப் பெற்றவரும் 27-7-1959உ அன்று எண்பதாண்டு நிறைவு பெற்றவருமான திரு. ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் 27-7-1879-ல் திருநெல்வேலி நகரில் தோன்றினார். நாவலர் பாரதியாரின் முழுப்பெயர் சச்சிதானந்த சோமசுந்தர பாரதியார் என்பதாகும். அப்பெயரை ச. சோ. பாரதியார் என்றும் வழங்குவர்.

எட்டயபுரம் அரண்மனைப் பண்ணைத் தலைவராய் வாழ்ந்த எட்டப்ப பிள்ளை என்னும் சுப்பிரமணிய நாயகரே நாவலர் பாரதியாரின் தந்தையாவார். பிள்ளைப் பேற்றுக்கே பெற்றோர் திருநெல்வேலி சென்றிருந்தனர். எனவே நாவலர் பாரதியார் திருநெல்வேலியில் பிறந்தவரானாலும் சொந்த ஊர் எட்டயபுரம் என்றே சொல்ல வேண்டும்.

நாவலர் பாரதியார் பிறந்து, 30 நாள் சென்று எட்டயபுரம் வந்ததும் அரசர் தாயார் "லோகமாதா" என்று பெயர் வழங்கிய இலட்சுமியம்மாள் அவர்கள் குழந்தையைக் கண்டு தானே வளர்க்க விரும்பினார். பெற்றோரும் உடன்பட்டனர். அரசியார் கண்காணிப்பில், அரவணைப்பில்—பத்து வயது நிரம்பும் வரையில் பாரதியார் வளர்ந்தார். அப்பத்தாண்டுகளும் நாள் தோறும் ஊன் சோறு உண்டார். அரண்மனையின் செழிப்புக்குச் சொல்லவா வேண்டும்!

அரண்மனை அரசியார் மறைவான பின், நாவலர் பாரதியார் பெற்றோருடன் வாழ வந்து சேர்ந்தார். அந்தப் பதினோராம் ஆண்டிலிருந்தே வீர சைவராக மாறினார். பாவலர் தேசிய கவிஞர் சுப்பிரமணிய பாரதியாருடன் இளமையிலிருந்தே நாவலர் பாரதியார் நெருங்கிப் பழக நேர்ந்தது.

சூழ்நிலையாலும் தம் நுண் மாண் நுழை புலத்தாலும் நாவலர் பாரதியார் மற்றொரு பெரு மாற்றமும் அடைந்துள்ளார். அது அவர் தாய்மொழி பற்றியது. தெலுங்குஅவர் தாய் பேசிய மொழி. என்றாலும் அவருக்கு அருந்தமிழில் ஏற்பட்ட பற்றுதலும் ஈடுபாடும் அம்மொழி மறந்து தமிழ் மயமானார். இதற்கு உலக வரலாறும் வழி காட்டுகிறது. நெப்போலியன் தாய்மொழி இத்தாலி. ஆனால் அவ்வீரன் மனம், மொழி, மெய் மூன்றும் பிரஞ்சு மயமாகியதன்றோ!

நாவலர் பாரதியார் ஆங்கிலத்தையே ஊன்றிக் கற்கத் தூண்டப்படினும், எட்டயபுரம் கோவில் வாகன மறைவில் பாவலர் பாரதியாரோடு மறைந்திருந்து தமிழ் நூல்களை ஊக்கமாகக் கற்கவே துணிந்தார். அதன் விளைவாகவே இன்று அவர் தமிழ்ப் பேராசிரியராகத் திகழ்ந்து வாழ்கிறார். அவரைத் தமிழகம் பாராட்டுகின்றது.

எட்டயபுர மன்னர் தாயார், முன்பு குறிப்பிட்ட இலட்சுமியம்மாள் அவர்கள் நாவலரிடம் எவ்வளவு அன்பு வைத்திருந்தார்கள் என்பதை நாம் மற்றொரு உண்மையாலும் உணர்ந்து மகிழலாம். அவ்வம்மையார் பன்னிரண்டு ஏக்கர் புன்செய் நிலத்தை வாங்கி நாவலர் பெயருக்கு எழுதி வைத்திருந்தார்கள். அவ்வம்மையார்க்கு இவ்வாறு பிற்காலத்தில் விளங்கும் தமிழாராய்ச்சி வீரனை ஆதரித்து வளர்த்த பெருமை உண்டு. அவர்களுக்கும் நம் நன்றி உரித்தாகுக.

கலையும் நிலையும்

பதினோராம் ஆண்டு அவர் தந்தை எட்டயபுரம் அரண்மனைப் பண்ணைத் தலைவரிடம் வந்து வாழ்ந்து கல்வி கற்கத் தொடங்கினார் நாவலர் பாரதியார். அதுவரையில் கல்வி கற்கும் வாய்ப்பே இல்லாமல், அன்பில் மூழ்கடித்து வளர்த்தவர் அரசியார் இலட்சுமியம்மாள் அவர்கள். 'மக்கள் சொற் கேட்டல் இன்பம் செவிக்கு" என்றதைக் கருதினார்போலும்! வருங்காலத்தில் தம் அன்புக்குரிய குழந்தை கல்வியிலும் முன்னேற வேண்டும் என்று கருதிப் போலும், பன்னிரெண்டு ஏக்கர் நிலம் வாங்கி நாவலர் பெயருக்கு எழுதி வைத்திருந்தார். அந்நிலத்தை விற்றே நாவலர் கல்வியின் மேற்பகுதி நிறைவேறியது.

எட்டயபுரத்தில் எட்டாம் வகுப்பு வரையில் நாவலர் கற்றார். அங்கே கற்கும்போதே விளையும் பயிர் முளையில் தெரிந்தது. அவர் பூங்கணிதப் பாடத்தில் வல்லுநரானார். அவரை ஆசிரியரும் பாராட்டினார். பாராட்டிய ஆசிரியர் அந்தணர். அந்தணச் சிறுவர்களைவிட மிக உயர் நிலையில் நாவலரை மதித்துப் பாராட்டினார். இயூகிலித்து தனிமங்கள் (Euclids Elements) என்ற பூங்கணிதம் ஆசிரியரால் நடத்தப் பெற்றது. முதல் ஒரு செயல் திறம் செய்து காட்டினார் ஆசிரியர். அடுத்த தேற்றங்களை நாவலரே நன்கு தெரிந்து எழுதிக் காட்டி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். என்றாலும் அவரே கணிதத்துறை முழுதும் கற்க முடியாமல் போனதுபற்றி வருந்தினார். எண்கணிதத்துடன் பூங்கணிதம் நன்கு நுண்ணிய முறையில் கற்றுவரினும் கணிதத்தின் ஏனைய பாகமாகிய நுண் கணிதம் (Algebra) அவருக்கு வரவில்லை. காரணம், அக்கணித ஆசிரியர் தெளிவாகச் சொல்லித் தரவில்லை. கல்விக்கு இன்றியமையாதது கணக்கு என நன்கு உணர்ந்த நாவலர் அது தனக்கு வாய்க்கவில்லையே என்று வருந்துவதுண்டு.

"கணக்கறிந்தார் கல்வி கற்றறிந்தாரே" என்பர் திருமூலப் பெருந்தகை. அறிவுக்கண், கணக்கேயன்றோ! காந்தியார் தமக்குக் கையெழுத்து நன்கமையவில்லை என வருந்தியதுபோல நம் நாவலர் கணிதத்தில் தாம் வல்லுநர் ஆகவில்லையே என வருந்துவதுண்டு. இன்றைய அறிவுலகம் முழுவதும் கணக்கியல் அடிப்படையில் அமைந்திருக்கிறது. ஒரு நாடு எவ்வளவு முன்னேறியிருக்கிறதெனின், அது பயன்படுத்தும் கணக்கின் அளவே என்பர் அறிஞர்.

எட்டயபுரத்தில் கல்வி கற்றுத் தேர்ந்த பின்னர் திருநெல்வேலிக்கும் பின்னே சென்னைக்கும் சென்று கல்வி கற்ற நாவலருக்கு அறிஞர் சாஃப்டர் (Schafter), அறிஞர் மில்லர் என்ற பெரியோர்களின் துணைகிடைத்தது பெரிதும் பாராட்டத்தக்கது. அறிவிலும், பொருளிலும் துணைபுரிந்த பலரில் இவர்களையும் குறிப்பிட வேண்டும். நெல்லையில் சி. எம். எஸ். கல்லூரியில் இளங் கலைவாணர் (F. A.) ஆனார். சென்னை கிறித்தவக் கல்லூரியில் கலைவாணர் (B. A.) ஆனார். பின் சட்டம் பயின்று அலுவல் பார்த்தார். அப்போது கலைவல்லுநர் (M. A.) ஆனார். எம். ஏ-யில் தமிழை முதன் மொழியாகவும் மலையாளத்தைத் துணை மொழியாகவும் கற்றார். எம். ஏ-யில் இரு மொழிகள் படிக்க வேண்டும், அப்போது!

திருநெல்வேலிக் கல்லூரியில் கிறித்துவச் சமயப்பாடம் கற்பிக்கும் ஒருவர் தமிழர் சமயத்தை இழித்துரைத்தார். தமிழர் இலை போட்டுண்ணும் முறையை நகைத்தார். அவருக்கேற்ற பதில் தந்து வகுப்பே அவ்வாசிரியரை நகைக்கும்படி செய்தார் நாவலர் பாரதியார். அப்போதே நகைச்சுவை ததும்பப் பேசும் திறனுடையார் பாரதியார். கல்லூரித் தலைவரும் நாவலர் பக்கமே நின்று அந்த ஆசிரியரின் தன்னடக்கமற்ற நடத்தையைக் கண்டிக்க நேர்ந்தது. சமயம் போதிப்பவர்கூடச் சமயமறியாமல் போதிப்பது பெருந் தவறன்றோ!

நாவலருக்குச் சென்னையில் ஆசிரியராகத் திகழ்ந்தவர்களுள் மறைமலையடிகள் ஒருவர்; வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார் மற்றொருவர். இத்தகைய அறிஞர் பலரின் கூட்டுறவால் நாவலர் பாரதியார் தமிழ் ஊற்றம் பெற்றார். தமிழ் கற்றவர் அனைவரும் தமிழ் ஊற்றம் உடையவர் என்பதற்கில்லை. நாவலருக்கு ஏற்பட்ட தமிழ் ஊற்றம் அளவைக் கலையாலும் அறிஞர் உறவாலும் உருவாகியது எனலாம்.

இல்லறமும் நல்லறமும்

நாவலர் பாரதியாருக்குப் பதினைந்தாம் வயதிலேயே முதல் திருமணம் நடந்தது. திருமதி மீனாட்சியம்மையார் முதல் மனைவியார். அந்தணரில்லாமல், வடமொழி மந்திரம் ஓதாமல், தேவாரம் பாட, திருப்பல்லாண்டு முழங்கத் திருமணம் நடத்த வேண்டும் என்று நாவலர் தம் தந்தையரிடம் வற்புறுத்தினார்.

மங்கை மாங்கல்யத்தை இழப்பாள் என்று சொல்லித் தந்தை மறுத்தார். வீரசைவர் நாவலர் பாரதியார் தேவாரம் பாடும் ஓதுவாரை அழைத்துத் தந்தைக்குச் சமாதானம் சொல்லும்படி வேண்டினார். ஓதுவார் ஓடி மகன் கருத்து நல்லது என்றார். தந்தை ஒப்புக்கொண்டார். நாவலர் விரும்பியபடி முதல் திருமணம் இனிது நடந்தேறியது. இம்முதல் மனைவிக்கு இரு ஆண்களும் ஒரு பெண்ணும் பிறந்தனர்.

முதல் மகன் இராசாராம் பாரதி என்ப்படுவார். இவர் டாக்டர். நாட்டாண்மைக் கழக மருத்துவ நிலையங்களில் பணியாற்றி ஓய்வு பெற்று, இப்போது எட்டயபுரத்தில் மருத்துவ நிலையம் வைத்துப் பொதுப்பணியாற்றுகிறார். எட்டயபுரத்தில் "தமிழகம்" என்ற பெயரோடு ஒரு பெரிய இல்லம் நாவலர் பாரதியாரால் கட்டப்பட்டது. அம்மாளிகையிலே இப்போது முதல் மகனார் வாழ்கின்றார்.

இரண்டாம் மகன் இலக்குமிரதன் பாரதி எனப்படுவார். இவர் வழக்கறிஞர். எம். ஏ., பி. எல். பட்டம் பெற்றவர். இவர் இப்போது சமுதாயநல மாநில அலுவலராக இருக்கிறார். சென்னை அடையாறு காந்தி நகரில் ஓர் இல்லம் கட்டி அதில் வாழ்கின்றார்.

மூன்றாவது பெண் இலட்சுமி அம்மாள் எனப்படுவார். தன்னை அன்போடு பத்து வயதுமட்டும் வளர்த்த எட்டயபுரத்து அரசியார் திருப்பெயரையே தன் ஒரே பெண் குழந்தைக்கு இட்டு நாவலர் மகள் திருமதி இலட்சுமி அம்மாள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. எஸ். கிருட்டிணசாமி பாரதியாரின் வாழ்க்கைத் துணைவியாவார்.

இரண்டாம் மனைவி மலையாள தேசத்தவர். வசுமதி என்பவ[illegible]

— 14-ம் பக்[illegible]

பண்பா?

சற்றேறக்குறைய இருபது ஆண்டுகளுக்குமுன் ஒரு நாள் திருக்குற்றாலத்தில் எட்டயபுரம் அரசர் மாளிகை விருந்தினர் விடுதியின்முன் தென்காசித் தமிழ் அன்பர்கள் ஐவர் நின்றுகொண்டிருந்தனர். அவ்வழியாகச் சென்ற நான் அவர்களுக்கு வணக்கம் கூறி 'யாரை எதிர்பார்த்து நிற்கின்றீர்கள்?' என்றேன். 'உங்கள் ஊர் பாரதியாரைத்தான். அவர்கள் இங்குதான் தங்கியுள்ளார்கள்' என்றார் ஒருவர். "தென்காசித் திருவள்ளுவர் கழகத்தில் ஒரு சொற்பொழிவாற்ற அவர்களை அழைக்க வந்துள்ளோம்." என்றார் மற்றொருவர். "நற்செயலில் ஈடுபடும் உங்கள் கூட்டத்தில் என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறி வெளியில் உலாவச் சென்றிருந்த பாரதியாரை எதிர்நோக்கி அவர்களுடன் நின்றேன்.

சிறிது நேரத்தில் சிங்க ஏறுபோல் பீடு நடை போட்டு முறுக்கிய மீசையுடன் வந்தார் பாரதியார். எங்களை அன்புடன் வரவேற்றார். உள்ளே அழைத்துச் சென்றார். சிறிது உரையாடலுக்குப்பின் நாங்கள் எதற்காக வந்துள்ளோம் என்பதைக் கூறினோம். ஒரு நிபந்தனையுடன் எங்கள் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டார். மறுநாள் மதுரைக்குத் திரும்புவதால் அன்று மாலையே கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தால் வருவதாகக் கூறினார். அன்பர்களும் அதற்கு இசைந்து நாவலரைச் சரியாக இரவு 7 மணிக்கு அழைத்து வரும் பொறுப்பை எனக்குக் கொடுத்துச் சென்றனர்.

பெரிய கூட்டமல்ல. சிறிய கூட்டமானாலும் திருக்குற்றாலச் சாரலுக்கு வந்திருந்த தமிழறிஞர்கள் திரளாகக் கூடியிருந்தனர். கூட்டத் தலைவர் தென்காசிமாவட்ட முன்சீப்பு. அவர் பின்பு மாவட்ட நடுவராகி ஓய்வுபெற்று இப்பொழுது மதுரையில் இருந்து வருகின்றார். பாரதியார் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட பொருள் "தசரதன் குறையும், கைகேயி நிறையும்" என்பதாகும். கூட்டத்தின் முன் வரிசையில் திருவாளர்கள் டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களும், இராசா சர். அண்ணாமலைச் செட்டியார் குடும்பத்தினர் பலரும், டி. கே. சி. இல்லத்தில் நாள்தோறும் கம்பன் கவியின் பத்தை பருகிவரும் தமிழன்பர்கள் அனைவரும் இருந்தனர்.

பாரதியார் பேசுவதற்கு எழுந்தார். வணக்கம் கூறினார். கூட்டத்தில் இருந்த பெருமக்களை ஒரு முறை வரிசையாகப் பார்த்தார். முன் வரிசையில், மீசையைக் கீழ்நோக்கித் தடவிக்கொண்டிருந்த டி. கே. சி. [illegible] பார்த்தார். புன்முறுவலுடன் [illegible]ப மேல்நோக்கி முறுக்கி [illegible]க்காட்சி வீரனொருவன் மல்யுத்தத்திற்கு அறைகூவி அழைப்பதைப் போன்றிருந்தது என்ன நடக்குமோ என்று என்னைப்போல் பலர் அஞ்சி நின்றனர். ஆனால் நாங்கள் ஏமாற்றமேயுற்றோம்.

பாரதியாரின் பேச்சு மனிதப் பண்பின் உச்சநிலையை எட்டிவிட்டது. "அன்புமிக்க தலைவர் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! இன்று அவையின் முன் நிற்றற்கே நான் அஞ்சுகின்றேன். இதோ எனதுமுன் வீற்றிருக்கும் தமிழ் முனிவர் டி. கே. சி. அவர்கள் முன்னிலையில் பேசுவதற்கு எனக்கு என்ன தகுதியிருக்கின்றது? அதுவும் கம்பராமாயணத்தைப்பற்றி அவர்கள் முன்னிலையில் பேசுவதென்றால் எனக்கு அச்சமாக இருக்கின்றது" என அவையடக்கத்துடன் தொடங்கினார் பண்பாளர் பாரதியார்.

"நான் மிக வருத்தத்துடன் ஒன்று கூறிக்கொள்ள விரும்புகின்றேன். டி. கே. சி. அவர்கள் கருத்திற்குப் பல மாறுபட்ட கருத்துகளை நான் கூறவேண்டியிருக்கும்" என்று ஒரு பீடிகையைப் பணிவாகப் போட்டுத் தொடங்கினார் பாரதியார். "அதைக் கேட்கத் தானே நாங்கள் வந்துள்ளோம்" என்றார் டி. கே. சி.—இது **பண்பு**.

அதுவன்றி, மாறுபட்டக் கருத்துகளைக் கேட்ட அளவிலேயே தன்னிலை தடுமாறி உளறுவது—**பேயாட்டம்**.

"டி. கே. சி. அவர்கள் கம்பராமாயணத்தைக் கற்ற அளவு நான் படிக்கவில்லை. அவர்கள் ஒவ்வொரு பாடலையும் துருவித்துருவிப் பார்த்தவர்கள். ஏன்? ஒவ்வொரு சொல்லையும் சுண்டிச் சுண்டிப் பார்த்து, இது கம்பன் சொல்; இது இடைச்செருக்கு என்று பிரித்துக் காட்டக்கூடிய அளவு கம்பராமாயணத்தைப் படித்தவர்கள் டி. கே. சி." என்று பாரதியார் தன்னுடைய கருத்திற்கு மாறுபட்ட கொள்கையுடைய டி. கே. சியைப் புகழ்ந்தார்—**இது பண்பு**.

"வேதம் மறைத்து வைக்கப்பட வேண்டிய ஒரு பொருள் எனக் கூறுகின்றனர். ஆபாசமான பொருளைத் தானே மறைத்துவைப்பது நமது வழக்கம். அப்படியாயின் வேதம் ஒரு ஆபாசமான பொருள் என்றுதானே ஆகின்றது. அது அல்ல என்றால், நாம் எல்லோரும் சேர்ந்து அதைப் படிப்போம் வாருங்கள்" என்றால் வேதம் என்ற பெயரைத் தவிர அதைப்பற்றி வேறு ஒன்றும் அறியாத மேதை ஒருவர் குதித்தெழுந்து மேடையிலே ஆடுவது—**பேயாட்டம்!**

"டி. கே. சி. அவர்கள் ஆய்ந்து ஆய்ந்து இராமாயணத்திலுள்ள 10,000 பாடல்களில் 6000 பாடல்களே கம்பன் எழுதியனவாகும் என்று முடிவுகட்டியுள்ளார்கள். நான் அவர்களுக்குப் பணிவுடன் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகின்றேன். ஒருவரும் தவறுதலாக எண்ணாதீர்கள். (டி. கே. சியைப் பார்த்து) ஐயா! நீங்கள் கம்பன் எழுதியது என்று கூறும் 6000 பாடல்களில் அடியேன் 600 பாடல்களே கம்பன் இயற்றியவை. மற்றவை இடைச்செருக்குகள் என்பதைச் சான்றுகளுடன் விளக்க முடியும் எனக்கூற விரும்புகின்றேன்" என்று பாரதியார் கூறியவுடன் அதை முதல் முதலாகக் கைதட்டி ஆரவாரத்துடன் வரவேற்ற பெருமகனார் டி. கே. சி.யாவார்கள்—**இது பண்பு**.

மாற்றுக்கருத்தை ஒருவர் ஏற்றுக் கொள்ள வேண்டாம். எக்கருத்தையும் கேட்டுச் சிந்திப்பதே அறிவுடைமையாகும் என்பதை அறியாது பலர் முன்னிலையில் பூசாரியைப்போல் சாமியாடுவது —**பேயாட்டம்**.

பாரதியாரின் சொற்பொழிவு ஒரு மணி நேரம் நடைபெற்றது. முடிந்ததும் டி. கே.சியும் பாரதியும் விரைந்து சென்று ஒருவர் கையை ஒருவர் பற்றிக்கொண்டனர்.

"நான் ஏதோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன். பிழையிருந்தால் பொறுத்துக்கொள்ள வேண்டும்" என்றார் பாரதியார்.

"அடாடா! நான் செய்தவற்றில் ஏதாவது பிழையிருந்தால் நீங்கள் பொறுத்துக்கொள்ள வேண்டும். என் பிழையைத் திருத்துவது உங்கள் பொறுப்பு" என்றார் டி. கே. சி - **இது பண்பின் உச்சநிலை**.

பின் இருவரும் ஒரே வண்டியில் குற்றாலம் சென்றனர். இப்பண்பாளரின் சீடர்கள் என்று கூறிக்கொள்வோர், இன்று, 'வாய்ப்புக் கிடைத்தது; வாயாரத் திட்டுவோம்; பதவியிருக்கின்றது, நம்பின்னே பலர் வர' என்று நன்னிலை தெரியாது தொடங்கித் தடுமாறித் தாழ்வது - **பேயாட்டம்**.

ஆம், பூசாரிகள் பாடிப் பேயாடி முடிவில் நினைவற்றுத் தரையில்தான் வீழ்வார்கள் - சுற்றியுள்ளவர்கள் கிடைத்த நீரை அள்ளி முகத்திலே தெளிப்பர். தெளிவு பிறக்கும். ஆனால் அதைப் பார்த்து சாமி மலையேறிவிட்டது என்றுதான் பக்தர்கள் கூறுவர்.

வாழ்க தமிழ்ப்பண்பு.

—இளங்கீரன்

நடந்த கதை

நாவலர் ச. சோ. பாரதியார் அவர்களின் எண்பதாவதாண்டு நிறைவு விழா அண்மையில் மதுரையில் நடைபெற்றது. அதற்குத் தலைமை ஏற்றிருந்த திரு. மகாராசன் என்பார் நாவலரின் ஆணித்தரமான கருத்துக்களை மறுத்திருக்கிறார். கருத்து மாறுபாடு ஏற்படின் அதைச் சொல்ல யாருக்கும் உரிமை உண்டு. ஆனால் தமிழகம் வியந்தேத்தும் நாவலர் அவர்களின் கருத்தை மறுக்கையில், அவர் கைக்கொண்ட முறை எல்லோர் மனதையும் புண்படுத்திவிட்டது! தமிழ் மொழியைத் தம்மொழி என ஒப்புவார் அனைவரும், அப்பண்பற்ற செயலுக்கு வருந்தினர். தலைமை ஏற்ற திரு. மகாராசன் அவர்கள், "கம்ப ராமாயண ரிப்பேர்ப் பட்டறை" நடத்திய டி. கே. சி அவர்களின் பரம்பரையாருள் ஒருவர். அவருக்கு திரு. டி. கே. சி. அவர்களே நாவலர் கருத்தை மதித்த பான்மையைக் காட்டுவதுதான் இக்கட்டுரை! திரு. மகாராசனின் பண்பற்ற தாக்குதலுக்கு ஆளான நாவலர் பேச்சின் பகுதி இதுதான்:

"'மறை என்று பெயர் கொண்டுள்ள நூல்களைப் புறக்கணிக்க வேண்டும். மறைத்து வைக்கப் படுவதுதானே மறை! எதை மறைக்க வேண்டும்? ஒழுக்கக் கேட்டை மறைக்க வேண்டும்! வேதத்தை ஏன் மறைக்க வேண்டும்? அப்படி என்றால், அதில் ஒழுக்கக்கேடு அதிகம் உள்ளது என்றுதானே பொருள்? வேதத்தைத் தமிழில் காட்டுங்கள்; ஏன் இன்னும் மறைத்து வைத்திருக்க வேண்டும்? 'மனிதனைக் கொன்று சாப்பிட வேண்டும்' என்று ரிக்வேதம் கூறுகிறது; வேதம் கூறுகிறது என்பதற்காக நாம் ஏற்றுக்கொள்ளலாமா? எதையும் அறிவோடு அஞ்சாமல் சிந்திக்க வேண்டும். ஆபாசங்களை விலக்கியே வாழ வேண்டும்.

"தமிழர்கள் எதையும் சிந்திக்காமல் அஞ்சி வாழ்கிறார்கள் இதைக் கண்டு நான் மிகவும் வருந்துகிறேன்.

"உண்மையை இனிக்கும் வண்ணம் நாம் கூற வேண்டும். எப்பொழுதும் உண்மை கண்டே வாழுங்கள். அறிவிற்கு என்றும் மதிப்பளித்து, துணிவோடு அறிவு வழியில் செல்லுங்கள் என்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். சிந்தனை செய்பவர்களை நான் நாத்திகர்களாகக் கருதவில்லை."

இப்போது சொல்லுங்கள்; நாவலர் பேசியது தவறு? அதை மறுக்க மகாராசன் அவர்கள் கைக்கொண்ட முறை சரியா?

புதுவைத் தேர்தலில் நாம்

தித்திக்கும் சேதி ஒலிக்கட்டும்! திராவிடம் முழுதும் களிக்கட்டும்! காம்ரேடுகளுக்கேன் முகமூடி?

குபேரும் சுப்பையாவும் ஒரே குட்டையிலூறிய மட்டைகள்! பழிபோடுவோரே! வழிவிடுவீர்! அன்றேல் அழிவுறுவீர்!

புதுவையிலே நிற்போர் யார் யார்? புதுமைக்கு உழைப்போர் நாம், பார்!

திராவிட முன்னேற்றக் கழகம் புதுவை மாநிலப் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறது. புதுச்சேரி, காரைக்கால், மாகி, ஏனும் ஆகிய பகுதிகளுக்கான 39 இடங்களில் கழகம் 28 இடங்களுக்குத் தன் அபேட்சகர்களை நிறுத்தியுள்ளது. கழகம் தேர்தல் விவகாரங்களிலே தலையிடுவதற்கு முன்னால் எதிர்ப்பு அணியினர் அனைவரும் அறைகூவல் முறையிலே அழைப்பார்கள் "தேர்தலிலே போட்டியிடுங்கள்" என்று. 1957 பொதுத் தேர்தலில் கழகம் முதன் முறையாகப் போட்டியிட் முன்வந்த வேளையில் தேசியவாதிகள் கேலி பேசினர். எதிர்ப்பைச் சமாளிப்போம் எனவும் பதில் கூறினர். மற்ற எதிர்க்கட்சிகள் கழகத்தின் தேர்தல் முயற்சியை வரவேற்கவில்லை. மாறாக காங்கிரஸ் எதிர்ப்புச் சக்தியை பிளவுபடுத்துவதாகவும் கழகம் போட்டியிடுவதால் காங்கிரசுக்கே பலமும் பலனும் அதிகம் கிடைக்குமென்றும் தகாதமுறையிலே விமர்சனம் செய்தார்கள். சென்னை சட்டமன்றத் தேர்தலில் கழகத்தில் 15 உறுப்பினர்களும் 17 லட்சம் வாக்குகளைப் பெற்று வென்றனர், மாற்றார்களை! திராவிட முன்னேற்றக் கழகம் பொதுமக்களிடத்திலே போதுமான நல்ல தீர்ப்பைப்பெற முடிந்தது. மாற்றுக்கட்சியினர் கழகத்தின் வெற்றிகளைப் பாராட்டவில்லை. ஆனால் இந்தியத் துணைக்கண்டத்து நல்லறிவாளரும், தாயகத்தின் புகழ் விரும்பி வெளிநாடுகளில் அவதிப்படும் திராவிட இனத்தவரும் கழகத்தின் வெற்றிச் சேதிகளைக் கேட்டு வீரச் சிந்துபாடினார்கள். சென்னை நகராட்சியினைக் கைப்பற்றிய பெருமை முன்னேற்றக் கழகத்திற்குக் கிடைத்தது, மாற்றுக் கட்சியினரின் ஏசலுக்கும் இழிசெயல்களுக்கும் கிடைத்த பாடமாகும். மேயர் தேர்தலுக்கு அகில இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தமிழ் நாட்டுக்கிளையைத்தான் போட்டியிடத் தயாராக இல்லையென்று அறிக்கை விடச் செய்த பெரும்புகழ் கழகத்திற்கு உண்டு. சில சுயேச்சைகளைத் தாங்கித் தீரவேண்டிய அவலநிலை அனுதாபத்துக்குரிய காங்கிரஸ்காரர்களுக்கு நேர்ந்துவிட்டதே! மற்றக் கட்சிக்காரர்கள்-கழகத்தை எதிர்த்துத் தோற்றவர்கள்-வெளிப்படையாகப் பாராட்டாவிட்டாலும், காங்கிரஸ்காரர்களைப்போல் தூற்றாமல் இருக்கிறார்கள். இந்த வெற்றிகளின் அடிப்படையில்தான் புதுவை மாநிலத் தேர்தலிலும் முன்னேற்றக் கழகம் தன் கடமையைச் செய்யக் காத்திருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ் கட்சி, மக்கள் முன்னணி ஆகிய அமைப்புகள் மட்டுமே முக்கிய இடம் பெறுகின்றன புதுவைத் தேர்தலில்! அங்கே 25 ஆண்டுப் பாரம்பரியம் பெற்றுள்ளதாகப் பேசுகின்ற கம்யூனிஸ்ட் கட்சி நேரடியாகப் போட்டியிடாமல் 'மக்கள் முன்னணி' என்ற பெருந் திரைக்குப் பின்னாலேதான் தேர்தலில் கலந்து கொள்கிறது. பிரெஞ்சுப் பிடியிலேயிருந்து விடுபட்ட புதுவை, காரைக்கால் பகுதிகளை சென்னை மாநிலத்துடன் இணைக்காமல் புது டில்லியின் ஆதிக்கத்தில் சேர்த்தபோதே கழகம் கண்டித்து அறிக்கை தந்தது. வடநாட்டுக் காங்கிரஸ் சர்க்காரின் ஏஜண்டாக, திரு. கேவல்சிங் என்பவரை அனுப்பியபோதும் அதனை எதிர்த்தது. புதுவை மக்களின் விடுதலைப் பணிக்கு கழகம் தன் வலிவை ஆதரவாக்கிற்று. பதவிப் பித்தர்களும், ஏக இந்திய எத்தர்களும் புதுவையின் டில்லி இணைப்பை ஏற்றுக்கொண்டாலும் அரசியல் சட்ட அமைப்பின்படியும் புது வாழ்வின் தனிமையிலும் பாண்டிச்சேரிப் பகுதி மக்களை-தமிழகத்துச் சொந்தக்காரர்களை அடக்கியாளத் திட்டமிட்டது டில்லி! தனக்கோர் காலனியைப் போல உருவாக்கிவிட்டது! முன்னேற்றக் கழகம் இதுபோன்ற சதிகளைச் சாகடிக்கவே புதுவைத் தேர்தலில் பங்கு பெறுகிறது. தாயகத்தின் ஓர் அங்கமாக இருந்தாலும் வடவர் தம் ஆதிக்கத்திற்கு இடமாகத் திகழும் புதுவையை விடுவிக்க எண்ணிய கழகம் சொல்லும் எல்லாக் காரணங்களும் புதுவை மக்களுக்கும் ஏற்கனவே இல்லையென்பார் எவருண்டு? புதுவையைத் தங்கள் சொந்த நாடு எனச் சொல்வோரும் கூடக் காங்கிரசின் ஊழலாட்சி ஒழியவும், குபேர் கும்பலை ஒடுக்கவும், மக்கள் முன்னணி வெல்லவும். மாற்றுக் கட்சி சர்க்கார் அமைத்திடவுமே வருகிறார்களே தவிர, கழகம் கருதுவது போலவே புதுவையின் வளங்களை-தனிச் சிறப்புள்ள செல்வங்களை, நம் தாயகத்திற்கே பயன்படுத்த நினைக்கவில்லை. பாரிசுக்கு அடிமையாக இருந்த மக்கள் இனி டில்லிக்குத் தலை வணங்கும் நிலை பெறக்கூடாதென்பது என்பதே நம்முடைய ஆசை! தேர்தலில் போட்டியிடும் மற்றவர்கள் "மந்திரி சபை யாருக்கு?" என்ற எண்ணத்திலே தான்பிரச்சாரத்தைத் துவக்கியிருக்கிறார்கள். 'புதுவைக்கு நிதி தாரீர்! தாரீர்!' எனக் கேட்டுப் புறப்பட்டிருக்கிறார்கள்! காங்கிரஸ்காரர்களுக்குப் புதுவைத் தேர்தல் பெரிதும் குழப்பத்தைத் தந்துள்ளதாகும் - அங்கேதான் பல 'கருங்காலி'களைக் கண்டார்கள்! எனவே இப்போது புதிய கருவிகளை வீசத் துணிவார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகம் புதுச்சேரி மாநிலத்தில் புதிய கட்சியல்ல. பிற்போக்குவாதியான குபேர் கும்பலும் அவர் தம் தலைமைப் பீடமுமான காங்கிரஸ் கட்சி முன்னேற்றக் கழகம் போட்டியிடுவது தவறென்று சொல்லத்துணியவில்லை! ஆனால் மக்கள் முன்னணியில் மூடிவைக்கப்பட்டுள்ள கம்யூனிஸ்ட்கள் முன்னேற்றக் கழகம் போட்டியிடுவதை விரும்பவில்லையாம்! புதுவைப் பகுதியில் போட்டியிடத் தகுதியில்லையாம். எனவே தேர்தல்களத்தினைக் காலி செய்துவிட்டு ஓடிவிட வேண்டுமாம்! கம்யூனிஸ்ட் கட்சியின் புதுவைத் தேர்தலுக்கான பொறுப்பாளர் வி. பி. சிண்டன் அந்தப் பகுதியில் பேசுகின்ற எல்லாக் கூட்டங்களிலும் இந்தப் பாணியிலேயே பல செய்திகளைத் தந்துவிட்டார். மற்றுமுள்ள மாபெரும் தலைவர்களைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை! குறிப்பாக கே. டி. ராஜு என்ற மாஜி எம். எல். ஏ.யும் கட்சியின் பேரறிஞருமானவர், பேசுவது மிக வேடிக்கை! காங்கிரஸ் - கம்யூனிஸ்ட் ஆகிய கிங்காங்—தாராசிங் போட்டியில் கழகம் குறுக்கிடாமல் ஒதுங்கி நின்றுவிட வேண்டுமாம்! காங்கிரஸ் கட்சியை எதிர்ப்பதற்குக் கம்யூனிஸ்டுகளே தகுதிபெற்றவர்கள் என்ற முடிவை முன்னையத் தேர்தல்முடிவுகள் மாற்றி விட்டன. அவைகளையெல்லாம் மறந்துவிட்டு இன்றையதினம் புதுவையிலே மார்தட்டுகிறார்கள்! தமிழ்நாட்டில் கம்யூனிஸ்ட்கள் காங்கிரஸ்காரர்களை எதிர்ப்பதற்கு லாயக்கற்றவர்கள். இதை நான்கு பேர் பெற்றவெற்றியிலிருந்தே சொல்லிவிடமுடியும். நூறு பேர் கொண்ட சென்னை நகராட்சி மன்றத்தில் இடம் பெற்றுள்ளவர்கள் இருவர் மட்டுமே. ஆனால் காங்கிரஸ்காரர்களையும் பள்ளத்தில் தூக்கியெறிந்துவிட்ட முன்னேற்றக் கழகம் புதுவையில் போட்டியிடக் கூடாதாம்! தேனும்பேட்டை மைதானத்துச் சீமான்களைத் தேம்பியழச் செய்துவிட்ட சேதிகளை நன்றாகத் தெரிந்துள்ள கம்யூனிஸ்ட்கள் கழகம் போட்டியிடுவதே தவறு எனச் சொல்வது வேதனையாக மட்டுமல்ல; வேடிக்கையாகவும் இருக்கின்றது. கட்சியின் பெயராலே போட்டியிட முடியாத அனந்தன் நம்பியார்கள் புதுவை ராஜ்ய வெற்றியை, கேரளத்திலே கேட்கப்படும் பொதுத்தேர்தல் எனும் சவாலுக்குப் பதிலாக்கித் தருவார்களாம்! புதுவை, கம்யூனிஸ்ட்களுக்கே என்றால் அங்கே மக்கள் முன்னணி ஏன்? அந்த அணியில் இடம்பெற்றிருப்பவர்கள் எவரெவர்? வெற்றிக்கு விரைந்தோடி வரும் காம்ரேடுகள் கழகமும் கலந்துகொள்ளக் கூடாதெனக் கண்டிப்பதேன்?

திராவிட முன்னேற்றக் கழகம் புதுவை மாநிலத்தின் அரசியல் அமைப்பிலும், வணிகம், தொழில் வளர்ச்சி, கல்விப் பெருக்கம், போன்ற பல்வேறு பகுதிகளிலும் புதுமையைக் காணவே விரும்புகிறது. இவைகளைத் துணையாக்கி அமையப் போகும் சட்டமன்றம் புதுவையைத் தமிழகத்துடன் இணைப்பதற்கும் பெரியதோர் மாநிலத்தின் மற்றோர் அங்கமாக மாறுவதற்கும் முயல்கிறது கழகம். ஐந்தாண்டுத் திட்டங்களெனும டில்லி சர்க்காரின் ஏமாற்றுக் கருவிகளைக் காட்டி வடவர் ஆதிக்கத்தின் நேரடிப் பிடியில் தொடர்ந்திருக்க ஒப்புகின்ற அகில இந்தியக் கட்சியினர் அனைவரும்மீண்டும் புதுவையில் அடிமைச் சங்கிலியின் பிணைப்பு இருக்கவே விரும்புகின்றனர். எல்லா வகையிலும் மாறுபட்டுள்ளன கழகத்தின் இலட்சியங்கள். அதை ஏற்றுக்கொள்ளச் செய்யும் அரும்பணியாகப் பொதுத் தேர்தலில் பொறுப்பேற்றுள்ளோம். வெற்றிதோல்விகளைப்பற்றிய எந்தக் கவலையுமில்லை. மக்கள் முன்னணியினரும், காங்கிரஸ் கட்சியினரும் தாயகப்பற்றில் கழகத்தவரைத் தோற்கடித்து, மொழியார்வத்தில்-நாட்டுப்பற்றில்-இலக்கியச் சர்ச்சைகளில் பின்னுக்குத் தள்ளிவிட்டு முதலிடம் பெறக்கூடிய தகுதியிருந்தால், கழகம் தேர்தலில் கலந்து தவறு செய்கிறதெனச் சொல்லலாம்! எந்தத் தேர்தலிலும் கம்யூனிஸ்ட்களின் வெற்றிக்குக் கழகம் தடையாக நிற்கவில்லை. ஆனால் கழகத்தின் காவலரெனத்தகும் நாவலர் அவர்கள் தோல்வியைத் தங்கள் வெற்றி என்றுதான் சேலத்துக் கம்யூனிஸ்ட்கள் சொன்னார்கள். பொதுவாகவே கழகத்தை எதிர்ப்பதுதான் கம்யூனிஸ்ட்களின் தவறான கண்ணோட்டம் என்று அவர்களுடைய அஜய் கோஷ் மத்தியக் கமிட்டித் தீர்மானத்தில் மிக மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். கழகத்தின் கொள்கைகளைத் தவறெனச் சொல்வதற்குப் போதுமான நெஞ்சுரம் மிக்கவர்கள் அல்ல! மானத்தை மறந்துவிட்டுச் சேற்றைப் பூசிக்கொள்கிற போதுதான் தவறிவிடுகிறார்கள்! சேற்றினைப் பூசிக்கொள்ளாத வகையில் கழகத்தின் போட்டியினைச் சமாளிக்கத் தயாராகட்டும் கம்யூனிஸ்ட்கள்! ஆகஸ்ட் 11, 14, ஆகிய இரு நாட்களிலும் நடைபெறப் போகின்ற தேர்தலில் கழக அபேட்சகர்களை ஆதரித்து வெற்றிபெறச் செய்யும் கடமைகளைப் புதுவை மாநிலத்துப் பெருமக்களுக்கும், கழகத் தோழர்களுக்கும் மிகப் பணிவுடன் நினைவூட்டுகிறோம் மொழி வளர்த்து தொழில் வளர்த்து, பொருள் பெருக்கி, புகழ் பெருக்கி; நாடு மீட்கப் போகும் விடுதலை வீரர்களுக்கு வெற்றிகளைப் பெற்றுத் தாருங்கள்; அந்தத் தித்திக்கு[illegible] கேட்டுத் திராவிடத்தா[illegible]

—[illegible]

கைம்மாறு

வளர்ச்சிக்கான வழிகள் இரண்டு. ஒன்று நேற்றிருந்த நிலைக்கு இன்றைய நிலையைச் சற்று உயர்த்துதல். இன்னொன்று நேற்று இருந்த நிலை இன்று அழியாமல் பாதுகாத்தல். புதியதாக ஒன்றும் சேரவில்லை. எனினும் முன்னமே இருந்தது அழியவில்லை என்பதே ஒரு வகையில் வளர்ச்சிதான்.

நாலு விதைகளை ஊன்றினால் நாலு செடிகள் வளருகின்றன. அது ஒரு வகைத் தொண்டு. முன்னமே ஊன்றிய விதையிலிருந்து முளைத்திருக்கும் செடிக்கு வேலி இடுவதினால் அவை பாதுகாக்கப்படுகின்றன. இது ஒரு வகைத் தொண்டு.

வாள் எடுத்து எதிரியைத் தாக்குவதும் போர்; எதிரி தாக்கும்போது கேடயத்தால் தாங்கிக்கொள்ளுவதும் போர்.

உணவு உண்ணுவதும் உடலுக்குத் தேவை. உண்ட உணவு செரிக்க உழைப்பதும் உடலுக்குத் தேவை.

நுட்பமாகப் பார்த்தால் முன்னையதைவிடப் பின்னையதிலே பொறுப்பு மிகுந்திருப்பதையும், பலன் பெருகியிருப்பதையும், அறியலாம்.

புதிய செடி முளைக்காவிடின் 'இலாபம்' ஒன்றும் இல்லை என்பது உண்மை; ஆனால் அதனால் இழப்பது ஏதும் இல்லை. ஆனால் பழைய செடி அழிந்தால் 'இலாபம்' இல்லாததோடு இழப்பு நேருகின்றது.

வாள் எடுத்து எதிரியைத் தாக்கினால் வரும் வெற்றி, தாக்காதபோது வராது போகலாம்: ஆனால் கேடயத்தால் தடுத்துக்கொள்ளாவிட்டால் உயிருக்கே 'உலை' வந்துவிடும்.

உணவு உட்கொள்ளாவிடின் பசித் துன்பம் மட்டுமே; ஆனால் உண்ட உணவு செரிக்காவிடின் நோய் முதலியன வந்து நொடிக்கும்.

'ஆகாறு அளவு இட்டிதாயினும்,' 'போகாறு அகலாக் கடை' 'கேடு இல்லை' என்பது வள்ளுவர் கூறும் அறிவுரையன்றோ?

மொழித் துறையிலும் இதேநீதிதான். **நம்மால் மொழியை வளர்க்க இயலுகின்றதோ இல்லையோ-அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டா: முன்னமே வளர்ந்திருக்கின்ற மொழியை நாம் அழிக்கக்கூடாது.** நாம் மொழிக்கு நன்மை செய்யாவிடினும், பிறர் செய்யும் கேடுகளையேனும் தடுக்க வேண்டும். அதுவே ஒருவகையில் பெருந் தொண்டு என்று சொல்லலாம்.

இன்று நம்முடைய மொழியின் நிலை இந்த நெருக்கடியில்தான் உள்ளது 'தமிழ்-எங்கள் உயிருக்கு நேர்'' என்று அமைச்சர்கள், போகின்ற இடங்களில் எல்லாம் மார்தட்டிப் பேசுகின்றனர். ஆனால் தமிழ்மொழிக்குப் பகையோ நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. அஞ்சலகங்களில், அரசினர் அலுவலகங்களில் இருப்புப்பாதை நிலையங்களில், நெடுஞ்சாலைகளில், எங்கும் எதிலும் இன்று 'இந்தி' இளித்திருகிறது. இந்த இழிநிலை துடைத்திட வாரீர் என்று அழைக்க ஒரே கழகம்தான் பாடுபடுகின்றது. இதே நிலை இருபது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்தது. இன்றிருக்கும் விடுதலை அன்றில்லை; இன்றிருக்கும் வாய்ப்பு அன்று இல்லை. தமிழகப் பள்ளிகளில் தகாத முறையில் இந்தி எனும் நச்சரவம் நுழைவதைக் கண்ட நல்லறிவாளர் பலர் சீறி எழுந்தனர். தடந்தோள் காட்டி, 'தடுப்போம் இந்தியை' என்று முழங்கினர். நாடெங்கும் அந்த முழக்கம் எதிரொலித்தது. எங்கெங்கோ கிடந்த தமிழ்வீரர்களை அந்த முழக்கம் ஒன்று திரட்டியது. தமிழர்க்குத் தன் உணர்வும், பற்றும் வளர்ந்தன.

அந்தப் பெருமுழக்கம் செய்திட்ட வீரர்களுள் டாக்டர் நாவலர் கணக்காயர் சோமசுந்தர பாரதியாரும் ஒருவர். பெரியார், அறிஞர் அண்ணா, ஈழத்து அடிகள், விசுவநாதன் ஆகியோர் தொடங்கிய தொண்டினைப் பாராட்டி அவர்களுக்குத் துணையாய் நின்ற தமிழ்ப் பேராசிரியர் பாரதியார் ஆவார்.

'நானும் வருவேன் உங்களோடு. ஆனால் இந்தப் பாழும் பதவி ஒன்று இருக்கிறதே' என்று அவர் தயங்கவில்லை. 'வர எனக்கு விருப்பம்தான். ஆனால் நான் கதர் கட்டியிருக்கிறேனே' என்று அவர் சலங்கவில்லை **உடுத்தியிருந்த கதரும், உயர்ந்திருந்த பதவியும் 'உயிருக்கும் மேலான தமிழ்மொழிக்குப் பிறகே'** என்று உள்ளத்தில் உணர்ந்தார். வெள்ளம்போல் திரண்ட தமிழர் கூட்டத்தில் தமிழர்க்கு வெல்லமெனத் தித்திக்கும் சொற்களையும், பகைவர்களைத் தீய்த்துவிடும் சொல்லம்புகளையும் பொழிந்தார். கல்லூரி அறையில், வசதியான நாற்காலியில், அமைதியான சூழ்நிலையில் ஆராய்ச்சிகளைச் செய்துகொண்டும், பிறர் செய்தவற்றைச் செப்பனிட்டுக் கொண்டும் இருந்த அந்தப் பேராசிரியர், காடுமேடுகளில் அலைந்தார், பகல் இரவு பார்க்கவில்லை. ''இந்தி வந்துவிடும்; இன்னல் விளைந்துவிடும். புறப்படுவோம் வாரீர் போருக்கு என்று அறைகூவல் விடுத்தார். மொழிக்குப் பகை வந்துவிட்டபோது விழிக்கு அழிவு வந்துவிட்டதுபோல் கொதித்து எழுந்து போரிட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் மதுரையில் அறிஞர் அண்ணா அவர்களுக்கு அளிக்கப்பட்ட தேநீர் விருந்து ஒன்றில் நாவலர் பாரதியார் கலந்துகொண்டபோது, அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டிப் பேசினர் இறுதியில் அறிஞர் அண்ணா அவர்கள் பேசும்போது ''டாக்டர் **பாரதியார் அன்றைய தினம் எங்களுக்கு அளித்த அறிவுரைகள் தாம், அவர் எடுத்துச் சொன்ன தமிழ்மொழியின் அழகு நிலைகள் தாம், அவர் ஊட்டிய வீரம்தான், இன்றும் என் போன்றவர்களுக்குத் துணையாக இருந்து வருகின்றன.**'' என்று புகழ்ந்துரைத்தார்கள்.

நாவலர் பாரதியார் மொழிக்காக-தமிழ்மொழிக்காக - அதனைப் பாதுகாக்கும் பணியை-வேலியிட்டுப் பயிர் காக்கும் பணியை - வேலியிட்டுப் பயிர் காக்கும் தொண்டினை, கேடயம் தாங்கி எதிரியினைத் தடுக்கும் கடமையினை, உணவு செரிக்க உழைக்கும் பணியினைச் செய்தார்கள்.

அந்த அளவோடு அவருடைய தொண்டின் சிறப்பு அமையவில்லை.

வேலி கட்டியதோடு, புதிய செடிகளையும் வளர்த்தல்போல், கேடயத்தால் தன்னைக் காத்துக்கொண்டு வாளால் எதிரியை வீழ்த்துவதுபோல், உணவு செரிக்க உழைத்தபின் புது உணவுக்கு வழி தேடுவதுபோல், எதிர்த்து வந்த இந்தியினைத் நிறுத்தப் போரிட்டதோடு, புதிய பலகட்டுரைகளை-ஆராய்ச்சிக் கட்டுரைகள்-நூல்களை எழுதி யளித்ததன் வாயிலாகத் தமிழ் மொழிக்கு அளவில்லா அருந் தொண்டினை ஆற்றியுள்ளார்கள்.

அந்த முதுபெரும் புலவர்க்கு-முத்தமிழ் காத்த மூதறிஞர்க்கு நாம் செய்யும் கைம்மாறு ஒன்றே ஒன்றுதான்: **அது மொழி காத்து வாழ்தல்!**

-மா. கி. தசரதன், எம். ஏ.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும், தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்

THE SCHOOL OF ENGLISH LEARNING

ஆங்கிலக் கல்வி நிலையம்,

60, பிராட்வே, மண்ணடி, சென்னை - 1.



தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்

ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக திருத்தமான முறையில்

இங்கிலீஷ் தபால் மூலம் **கற்கலாம்**

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்திசெய்து **24-8-59-ந் தேதி** வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள் **25-8-59-ந் தேதி** முதற்கொண்டு தொடந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். ''தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்'' எனில், மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம் (3) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சி யளிக்கப்படும். (4) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 புதிய காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலக மொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

தொண்டர்! தூயவர்!

தமிழக வரலாற்றில் 20-ம் நூற்றுண்டு நக்கீரர் நாவலர் சோமசுந்தர பாரதியார் எனின் மிகையாகாது. பாரதியார் அவர்களை 1935 முதல் அறியும் வாய்ப்பும் பேறும் கிடைத்தது. சென்னை மாணவர் மன்ற நான்காம் ஆண்டு விழாவிற்குத் தலைமைவகிக்கப் பேராசிரியர் ஆலால சுந்தரம் (செட்டியார்) அவர்கள் மூலமாகக் கடிதம் எழுதிவரவழைத்தேன். தமிழ், தமிழ்நாடு, தமிழர் உயர பணியாற்றும் ஒரு நான்காம் படிவம் படிக்கும் மாணவன் கேட்கும்போது வழிச் செலவையும் எதிர்பாராமல் தம் செலவில் வந்து இளைய சமுதாயத்தை வளர்த்தார். அவர் சென்னைக்கு வரும் செய்தியை ஒன்பது பெரும் பேராசிரியர்களுக்குத் தெரிவிக்கச் சொன்னர். அதன் காரணமாக அந்த ஒன்பது பேராசிரியர் பெருந்தலைவர்களோடு அறிமுகம் பெரும் பேறு பெற்றேன். இவ்வின்பம் துய்த்தார்க்கே அன்றி, பிறர் அறிவது அரிது. பின்னர் பாரதியார் 1937-ம் ஆண்டு சென்னைத் திருவள்ளுவர் கழகம் புரசை எம். சி. டி. உயர்நிலைப் பள்ளியில் கூட்டிய திருவள்ளுவர் விழாவில் கலந்துகொண்டபோது, அவ்விழாச் செயற்குழுவில் இருந்து பணியாற்றினேன் விழாவில் காட்பியச் செம்மல் நாவலர் பாரதியார் திருக்குறள் நெறிகளை உயர்நீதி மன்ற வழக்கறிஞர், வழக்கினை நீதிபதிக்கு விளக்குவதுபோல் அப்பேரவையில் கூடிய மக்களிடையில் விரித்துரைக்கும்போது மக்கள் அனைவரும் அறிவுக் கடலில் மூழ்கித் திளைத்து இருந்தனர். அவர்தம் உரை முடிந்த பிறகுதான் அனைவரும் விழாப் பேரவையில் உட்கார்ந்திருப்பதாகக் கருதினர். பாரதியார் பேருரை முடிந்த பிறகு சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பாரதியார் அவர்களைப் பற்றிப் பேசியது இன்னும் தமிழ்நெறி நின்றார் அனைவர் காதுகளிலும் ஒலித்தவண்ணம் இருக்கிறது. திரு. ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள் பாரதியாரைச் சுட்டிக்காட்டி, **''எங்கள் தலைவர்! (தாங்கள்) எங்கள் பக்கத்தில் அமர்ந்து கொண்டு, தங்களது மீசையை முறுக்கிவிட்டுக்கொண்டே இருந்தாலும் போதும்; எங்களது மறம் உயர்ந்து ஒளி செய்யும். அறம் தமிழர்களைப் புரந்து அரண் செய்யும். தமிழர்தப் பகைவர்கள், தமிழ் நில ஐந்தாம் படைக் கயவர்கள், தமிழர்களை எதிர்த்து நோக்கும் ஆற்றலும் அற்றொழிந்து போவார்கள்.''** என முழக்கம் செய்தார்.

ஆம்; முற்றிலும் உண்மையே! இன்றுகூட எத்தனையோ பேர்கள் முகத்தில் மீசையைக் காண்கிறோம். அம்மீசை முறுக்குவதையும், அம்மீசை முறுக்கைக் கண்டு ஏமாந்து, ''அந்தோ, தமிழை அழிக்கும் கயமைக்கா, ஐம்பதினுயிரம் நன்கொடை அளித்தோம்'' என்று விம்மும் முகங்கள் பல. ஆனால் செஞ்ஞாயிற்றின் ஒளி அழகு நிரம்பப் பெற்ற பாரதியார் தமது மீசையை முறுக்கி 1938-ம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போரில் ஈடுபட்டபோது, தமிழ் நிலம் பரபரப்புப் பெற்றது. பதுங்கி இருந்த அனைவரும் இந்தத் தமிழ்ச் சிங்கத்தின் அனல் கக்கும் ஆவேசப் பேச்சினையும், ராஜாஜிக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தினையும் கண்டு ஒன்று கூடினர். போர் முரசு கொட்டினர். தமிழர் நெல்லிக்காய் மூட்டை' என்னும் திருத்தமில்லாப் பொய் மொழியைத் தகர்த்து எறிந்தனர்.

பாரதியார் வீறுடையார்என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. நமது சோமசுந்தர பாரதியாரும், கவிஞர் சுப்பிரமணிய பாரதியாரும் அந்தக் காலத்திலேயே வாகனக் கிடங்கில் இருந்து படித்தனராம். கவிஞர் பாரதி எழுதும் சிறந்த கவிகளை நாவலர் கருத்துக்கும் அனுப்பி மதிப்புப் பெறுவது வழக்காம். அவ்வளவு ஈடுபாடு கவிஞரிடத்தில் நமது நாவலருக்கு. இளமை முதல் நாவலர் தேசிய இயக்கத்தில் ஈடுபாடு உடையவர். அந்தத் தேசியம் அக்காலத்தில் பார்ப்பனர்களுக்குத்தான் பயன்பட்டது; விளம்பரம் தந்தது. அப்பொழுது வங்கச் சிங்கம், மாசற்ற தொண்டின் செல்வர் சி. ஆர். தாஸ் அவர்கள் 1923-ம் ஆண்டில் தென்னுட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது அவரை வரவேற்று உபசரிக்க மதுரையில் யாரும் இல்லாது போயினர். மதுரை வைத்தியநாதய்யர் போன்ருர் தாஸ் அவர்களை எதிர்த்துத் தாக்கியும் பேசியும் வந்தனர். அப்பொழுது (1923-ல்), நமது நாவலர் திரு. சி. ஆர். தாஸ் அவர்களை வரவேற்றுத் தமது இல்லத்தில் தங்கச் செய்து, மதுரையில் பெருங் கூட்டத்தைக் கூட்டுவித்து, தாஸ் அவர்கள் பேசிய ஆங்கில உரையைத் தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லி காந்தீயப் பண்பாளருக்கு அன்றே அரியதொரு பாடம் கற்பித்தார்.

இத்தகைய பேராண்மையும், வீறும், தமிழ் மொழியில் ஈடில்லா நற்புலமையும் பெற்ற இவரது உதவி இன்றைய **தமிழகத்துக்கு மிகமிக அவசியமாய்த் தேவைப்படுகிறது. தொல்காப்பியத்திற்கு நல்லதோர் விளக்கவுரை ஒன்று அவசியமாகவும் அவசரமாகவும்** வேண்டப்படும் ஒன்ருகும். காய்தல் உவத்தல் இன்றி - நடுநின்று - சட்டம் வல்ல நுண்மான் நுழை புலனேடு தொல்காப்பியத்திற்குப் புத்துரை வழங்கும் பேறு இவர்க்கன்றி யார்க்கும் இல்லை என்பது தமிழ் அறிஞர் கண்ட முடிபு ஏன்; கலைக்களஞ்சிய ஆரும் தொகுதியில் தொல்காப்பியத்தைப் பற்றி நாவலர் எழுதிய கட்டுரை மீண்டும், மீண்டும் படித்து இன்புறற் பாலதாம். இக்கருத்தினை தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. அவர்கள் ஏற்கனவே வெளியிட்டார்கள். இன்று **''தமிழ் ஆராய்ச்சிக் கழகம்'' என, சென்னை அரசியலார் ஓர் ஆய்வுக்குழுவையும், நிறுவனத்தையும் நிறுவியுள்ளார்கள். சென்னை அரசாங்கம் ஏதேதற்கோ பணத்தைப் பாழ்படுத்துவதை ஓர்ந்து கவனித்து நமது பாரதியார் அவர்களைக் கொண்டு அவர் இருக்கும் இடத்திற்கு, ஒரு தமிழ் அறிஞரை ஊதியம் தந்து அனுப்பி வைத்து, ஒரு தட்டெழுத்தாளரையும் அனுப்பி, பாரதியாரின் வாயிலாகத் தொல்காப்பியத்திற்கு ஒரு தக்க ஆய்வுரை பெறுவோமாயின் எதிர்காலத் தமிழ்நாடு உய்யும்.** தொல்காப்பியத்தைப் பற்றி எத்தனையோ குறிப்புக்கள் அவரது எண்ணங்களில் பதிந்து இருக்கின்றன. அவ்வரிய குறிப்புக்கள் தமிழர்க்குப் பயன்படாதொழிவதா? அரசியலார் தமிழ் ஆராய்ச்சிக் குழு செய்யுமானல் தமிழ்ப் புலமை உலகம் நன்றி செலுத்தத் தவருது. இன்று அரசியலார் தமிழ் ஆய்வுக் குழு நினைத்தால் நாளை முதல் அதனை அமல் நடத்தலாம். அவரது 80-வது ஆண்டு நிறைவு விழாவைப் போற்றி-தமிழும் இனிமையும்போல் பல்லாண்டு பாரதியார் வாழ்க! எனத் தமிழ் அன்னையை வேண்டும் முகத்தான் அறிஞர் பெருமக்கள் அனைவரும் இக்கருத்தை நிறைவேற்றின் தமிழகம் உய்யும். **வாழ்க இளைஞர் சோமசுந்தர பாரதியார்!**

-சிறுவை மோகனசுந்தரம்

★ ★

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

(கொடி கீழ்த்திசை) நச்சினர்க்கினியரும் இவ்விருபொருள்களையே பற்றிச் சூரியனுக்கு இப்பதத்தை இணக்குதல் காண்க. மேகவாகனனுகிய இந்திரனது திசை கிழக்காதலின் அத்திசையே மேகத்துக்கும் உரியதென்பதும், அங்கு நின்றெழுந்த கொண்டல்களே உலகதாபந்தீரப் பெய்வன என்பதும் அறியத் தக்கவை. குணக்கினின்று எழுவது பற்றியே மேகம் கொண்டலெனப் பெயர் பெற்றதென்க. ''ஞாலம் வறந்தீரப் பெய்யக் குணக்கோபு-காலத்திறரேன்றிய கொண்மூப்போல்'' என்பதனல் (கலித். 82) கிழக்கிலெழும் கொண்டல்களே பெயலிற் சிறந்ததாதல் அறியப்படும். இவ்வாறன்றி மின்னற்கொடிக்கு நிலைக்களமாதல் பற்றி மேகம் 'கொடி நிலை' எனப்பட்டதெனினும் அமையும். இவற்ருல் கொடிநிலை என்பது மேகத்தைக் குறிக்கும் ஆற்றல் பெர்துடைபதாதல் தெளியலாம். இரண்டாவது கந்தழி என்பது-கந்து-பற்று, அழி-அழிவு; அஃதாவது பற்றழிந்தார் அல்லது நீத்தார் தன்மை என்றபடியாம். மூன்ருவதான வள்ளி என்பது அறத்தைக் குறிக்கும். என்னை? அவ்வறம் சிறப்பாக வண்மை பற்றியே நிகழ்வதாகலான். 'ஈதலறம்' என்ருர் ஔவையாரும். நச்சினுர்க்கினியர் தங்கொள்கைக் கியையச் சந்திரனுக்கு இப்பதத்தை இணக்குமிடத்து, ''வெண்கதிர் தேவர்க்கு அமிர்தம் வழங்கலான் வள்ளியென்பதூஉமாம்''. என்று கூறுதலினின்று வண்மையடியாகவே வள்ளி என்ற சொல் வழங்கியமை தெளியப்படும். படவே வண்மையாகிய அறத்துக்குரிய கடவுள் வள்ளி எனப்பட்டதென்க; இங்ஙனம் மேகம் நீத்தார் அறக்கடவுள் என்ற மூன்றும், கடவுளை முதலாகக் கொண்டு வாழ்த்தப்படுதலும் இப்பாடாண் பகுதியாம் என்பது, சூத்திரப் பொருளாதல் கண்டுகொள்க.''

இனி, இதற்கு நம் நாவலர் கண்ட புத்துரை வருமாறு :—

''கொடிநிலை கந்தழி வள்ளி என்ற=கொடிநிலை காந்தள் வள்ளி என்னும் பெயருடைய; வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்=போர்த்துவக்கமாம் வயைற்ற வெட்சியின் 'மறங்கடைக் கூட்டிய'' சிறப்பு வகை மூன்றை முதலாகக் கொண்டு வரும் பாடாண் பகுதி மூன்றும்; கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வரும்—கடவுட் பரவுதலுடன் பொருந்திவரும்.

''குறிப்பு:—ஈற்றேகாரம் அசை. பொதுவாகப் பாராட்டு நுவலும் பாடாணின் சிறப்பு வகை மூன்று, கடவுள் வாழ்த்தைத தழுவி வருதல் குறிக்கக் கடவுள் வாழ்த்துக்கு 'ஒடு''க் கொடுத்துரைக்கப்பட்டது. போரைத் தொடங்குந்திணை வெட்சி; அதன் பொதுவாக ஆகோள்; சிறப்பு வகைகளுள் பாடாணுய்க் கடவுள் வாழ்த்துக் கண்ணுவன இதிற்குறித்த மூன்றுமேயாதலின், முற்றும்மை கூட்டப்பட்டது. இதிற் குறித்த மூன்றும தம்மளவில் வெட்சி வகைகள். அவற்றை முதலாகக் கொண்டு வரும் பாடாண் பகுதி மூன்றே கடவுள் வாழ்த்தொடு வருமெனற்கு, ''முதலன மூன்றும்'' என்று கூறப்பட்டது. ''அகர முதல் எழுத்தெல்லாம்'' என்றதுபோல, கடவுள் கண்ணிய பாடாண் வகை இதிற் குறித்த 'மூன்று முதலன'' எனக் கொள்க. ''முதலன'' ஈறு குறிப்பு வினை; 'முதலாகவுடைய'' என விரியும்.

இனி, நம் நாவலர் புத்துரை பெற்ற இலக்கணத் துறைகளும் குறியீடுகளும் தனிச் செய்யுட்களும் பலப்பல இவராற் பாடப்பெற்ற சில செய்யுட்களுமுள. இவர் எழுதிய சேரர் தாய முறையும் தொல்காப்பியப் புத்துரையும், இவருடைய இலக்கண விலக்கியக் கல்விப் பரப்பையும், கூர்ந்த மதியையும், நுணுகிய நோக்கையும், ஆராய்ச்சி யாற்றலையும், ஒருங்கே புலப்படுத்தும்.

இனி, இவர் குலவொழிப்பு மாநாடுகளிற் கலந்துகொண்டதும் பெரியாருக்கிட்ட சிறைத் தண்டனையைக் கண்டித்ததும், குடி செயல் வகைத் தொண்டின் பாற்படும்.

இத்தகைய தமிழ்ப் பெரியார் நலமும் வலமும் நிரம்பப் பெற்று நீடு வாழ்க!

—திராவிட மொழிநூல் முனைவ
ஞா. தேவநேயப்பாவாணர்
எ[illegible] உ

எழுத்தாளர் "மகா"நாட்டில் ஈழத்தின் குரல்

கடந்த 1,2-8-59 தேதிகளில் சென்னையில் சில "விந்தைமனிதர்கள்" கூடினார்கள். தமிழைக் காக்க எவருமிலாது போனது போலவும், தாமே எல்லாமறிந்தோர் போலவும், தம்மையன்றித் தமிழுக்கு இலக்கணம் வகுப்பாரும் விளக்கம் தருவாரும் இல்லாதொழிந்ததுபோலவும், அந்த "அம்மாஞ்சிகள்" ஆட்டம் ஆடினர். தமிழ்உரை நடைபற்றி அம்மாநாட்டில் "புதிய பல கருத்துக்களைத்"தந்து தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்தப் புறப்பட்டிருக்கின்ற மாசிலாமணிகளின் முதல்வராக, ரா. ஸ்ரீ. தேசிகன் என்பார் புறப்பட்டிருக்கிறார். "அழகொழுகும் தமிழ் நடையில் ஆயிரம் புதிய கருத்துக்களைப் படைத்துக்காட்ட" வந்த அந்த "மொழிச்செல்வர்" "மறைமலையடிகளாரின் எழுத்தும் பேச்சும் தமிழா?" என்று துணிந்து கேட்டிருக்கிறார். ஆகா! என்ன துணிச்சல்? எவ்வளவு வீரம்! தமிழ்ப்புலவர்களே, நீங்கள் செத்தொழிந்தீர்கள்! இனி நீங்கள் தலைதூக்கவே முடியாது! ஏன் தெரியுமா? எங்கள் "அம்மாஞ்சி" தேசிகனுக்கு எதிராக உங்களால் என்ன செய்யமுடியும்!

ஆனால் தமிழ்ப் புலவர்களுக்கும்–பொறுமையின் சிகரங்களுக்கும்–அன்று சினம் பொங்கிவிட்டது அந்நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கிய டாக்டர் அ. சிதம்பரநாதனார், பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரையார், அமீது போன்ற பலரும் தக்க முறையில் பதிலளித்துச் சாடினர். அத்தோடு நமக்கு எல்லாம் மகிழ்வு தரும் வண்ணம் ஒரு புதிய முழக்கம் கேட்டது. "அந்த ஈழத்து ஒலி யாருடையது?" எனத் திரும்பிப் பார்த்தோம். அந்த வலிவான தோற்றத்தார் வழங்கிய வடிவான கருத்துக்கள் இவை.

"மறைமலையடிகள் எழுதியது, தமிழா? உரைநடைதானா?" என்று ஒரு குரல் சென்னையிலே கேட்கிறது. அதுவும், சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் ஏழாவது மகாநாட்டிலே பிறக்கிறது. இந்த நிலையிலே இன்று தென்னாடு இருப்பதைக் கண்டு எவரும் நாணாமல் இருக்க முடியாது.

இவர் யார் என்று பலர் அறியாராயினும் அவரது கருத்தைச் சுவைத்தனர். கடல் கடந்தும் தமிழ்காக்கும் திறனுடையார் இருப்பது கண்டு மகிழ்ந்தனர். நமக்கெல்லாம் நம்பிக்கையூட்டும் துடிப்புள்ள இந்தத் தொண்டரின் பெயர் தென் புலோலியூர் மு. கணபதி (ப்பிள்ளை) ஆகும். இவர் தமது "தமிழன் எங்கே!" முதலிய நூல்களால் தமிழகத்திற்கு அறிமுகமானவர்.

1944 முதல் '52 வரை இலங்கை கல்வித் திணைக்களத் தமிழ்ப் பாட நூல் மொழி பெயர்ப்பாளர்; '52 தொடக்கம் '58 வரை இலங்கை ஆட்சிமொழித் திணைக்களத் தமிழ் ஆராய்ச்சித் துணைவர்; இப்போது இலங்கைத் தொழில் திணைக்களத் தலைமைத் தமிழ் மொழிபெயர்ப்பாளர். இப்பொழுது தென்னாட்டின் வரலாற்றினை உள்ளபடி கண்டு உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுத் தமிழகம் வந்துள்ளார். கடந்த திங்கள் இங்கு வந்த இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இடையில் இயங்காதிருந்த ஈழ நாட்டு மாணவர் கழகத்தினை, துணைவேந்தர் பேராசிரியர்கள் துணையுடன் புதுக்கி யமைப்பதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டு, சென்னையில் நடக்கும் தமிழ் எழுத்தாளர் சங்க ஏழாவது "மகா"நாட்டில் கலந்துகொள்ள வந்தார்கள். அம்மாஞ்சிகள் கூட்டத்தில் தன் கடனை நிறைவேற்றிய அவருக்கு நம் பாராட்டு.

இலங்கை எழுத்துலகிலும் தமிழ்த் துறையிலும், தமிழர் நெஞ்சத்திலும் உறையும் திரு. மு.கணபதி(ப்பிள்ளை) அவாகள் பழகுதற்கினியர்; அறிதற்கு எளியர்; **தமிழர்க்குத் தோழர்; தொண்டர்!**

அவர்கள் நாவலர்க்குத் தன் வாழ்த்தைத் "தென்றல்" மூலம் தருகிறார்:

"இந்தத் தென்னாட்டிலே-இந்தச் சூழலிலே–"மறைமலையடிகள் நடையினை விளங்கிக்கொள்ள–அதுபோல் தூய தமிழில் எழுத"–இயலாதவர்களிடையே தோன்றி, 'நெற்றிக் கண்ணைக் காட்டிலும் குற்றம் குற்றமே' என்று கூறித் தாம் கூறுவனவற்றைத் திட்பமுஞ் செறிவுஞ் சார எடுத்துத் தூயதமிழில் நிறுவும் வன்மை கைவரப்பெற்ற தன்னிகரில்லாத் தகைமையாளர் நாவலர் சோமசுந்தர பாரதி ஆவார். அவருடைய செம்மை சான்ற தமிழ்நடைக்கு உயிரளிக்கும் மரபொன்று இன்று தமிழகத்தில் நிலவிக்கொண்டிருக்கின்றது; நாளுக்குநாள் பரவிக் கொண்டும் வருகிறது.

உண்மையைத் திரித்து உலகை மயக்கி வாணிபஞ் செய்வோர் சூழ்ச்சியினால், 'கல்லாப் பொதுமக்கள் பேசுந்தமிழ்–உருச்சிதைந்து, ஒலி குலைந்து, வழுமலிந்து மரபிழந்து வரும் சொற்களைக் கொண்ட மறுமலர்ச்சித் தமிழ் – என்றும் கட்டளைத் தமிழாக நிலைத்துவிடாது. "கீழ்மக்கள் கொச்சைக் குமுறலை மொழிநலம் விரும்புவோர் நல்ல தமிழெனக் கொள்ள இசையார்" என்னும் பாரதியார் கருத்து முற்றிலும் போற்றப்பட வேண்டியதொன்றாகும்.

தமிழ் இலக்கியத்துறையில் நாவலர் சோமசுந்தர பாரதியரவர்கள் ஆற்றிய தொண்டுகள் அளப்பில. அவர்தம் ஆராய்ச்சி முடிபுகள் நெறி தவறிச் செல்லும் இன்றையத் தமிழுலகுக்குச் செவ்வியதொரு நெறிகாட்டுவனவாம்." ★

தாயகத்தின் உயிர்வாழ்வே! வாழ்க!

தாயகத்தின் உயிர்வாழ்வே எங்கள் தாத்தா!
தமிழ்மொழியின் உயிர்நிலையே! அறிவின் வீரா!
தேய்அகத்தின் திராவிடத்தின் பண்பைக் காக்கத்
திறல்மிகுந்த இளமையுடன் உழைத்த நல்லோய்!
மாயத்தில் இந்நாட்டை ஆழ்த்தி வந்தோர்
மாய்த்திடவே கருத்தீந்த அன்புச் செல்வ!
தேயத்தின் நலமெண்ணி என்றும் வாழும்
தென்தமிழா! சோமசுந்தரப் பெரியோய் வாழ்க!

இந்தியெனும் மந்திதனை நுழைத்து நம்மை
இழிமொழியின் அடிமையென ஆக்கும் போழ்து
சிந்தையிலே வீரத்தோ டெழுந்து நின்றாய்!
சிங்கத்தின் உணர்வினையே இளைஞர் கொள்ள
முந்தியெழுந் திட்டஎங்கள் முதல்வா! இன்று
மூண்டெழுந்த உணர்ச்சியினை ஓங்கச் செய்தே
செந்தமிழைக் காத்திடவே வாராய்! வாராய்!
சீர்பெற்ற தித்திராவிடம் உன்னால் அன்றோ?

முத்தமிழில் புத்துணர்ச்சி ஓங்கச் செய்தாய்!
மாரிவாயில் தொல்காப்பி யத்தை ஈந்தே
சத்தூட்டிச் செந்தமிழைச் சிறக்கச் செய்தாய்!
சார்ந்திட்ட தமிழ்மொழிக்கே உன்னைத் தந்தே
வித்திட்டாய் புதியதோர் உணர்வு பூக்க!
விளைத்திட்ட உணர்வின்று ஆக்கம் தேக்கும்
முத்தாக ஒளிர்வதையே கண்டு வாழும்
முதுமொழியே! செந்தமிழே! வாழ்க நன்றே!

— ரவி.

நாவலர் வாழி!

★

சோமசுந்தர பாரதியாம் சோர்வில் லாநல்
சோடையிலாப் பெயருடையோய் வாழி வாழி!
கோமகனே நாவல!நின் கொள்கை அந்தக்
கொலைத்தமிழ்க்கே நஞ்சாகும் தன்மை வாழி!
தேமணக்கும் நாவலரே! தென்னாட் டில்நீர்
தென்றலென வந்துதித்தீர் என்றும் வாழி!
பாமணக்கும் இனிமைநூல் நற்ற மிழ்தான்
படைத்தவரே பல்லாண்டு வாழி நன்றே!

அரிமழம்-இராம. கணபதி.

ஒரே நாள் மட்டும்!

9-8-'59 ஞாயிறு மாலை 6 மணிக்கு
திருவல்லிக்கேணி, பார்த்தசாரதிசாமி சபா அரங்கில்
கலைஞர் மு. கருணாநிதி எம். எல். ஏ. தலைமையில்
பாண்டியன் நாடக மன்றத்தாரின்

விடை கொடு-தாயே!

நாடகம் நடைபெறும்

'முரசொலி' சொர்ணம் எழுதியது.

சென்ற இதழில்...

வெளியான மதுரையில் சென்னை மேயருக்களித்த வரவேற்பு விழாப் புகைப் படங்களை எடுத்தவர், மதுரைத் தோழர் **"புரு"**

"மனிதனும் மிருகமும்" என்ற கட்டுரையை எழுதியவர், தோழர் **பழனிவேலு.**

—8-ம் பக்கத் தொடர்ச்சி—

கலப்பு மணம் இது. திருமதி வசுமதி அம்மையாருக்கு இரு பெண்கள் பிறந்தனர். முதல் பெண் திருமதி மீனாட்சி. எம். ஏ. வரை கற்றவர். தந்தையாரின் வீரசைவ ஒழுக்கத்தைப் பின்பற்றிக் கணவரோடு வாழும் பெண் இவர். அடுத்த பெண் திருமதி லலிதா ஒருவர்.

இவ்வாறு நாவலர் பாரதியார் குடும்பம் பல துறைகளிலும் முன்னேறியுள்ள செய்தி தெரியலாம்.

ஆய்வும் ஓய்வும்

1905 லிருந்து 15 ஆண்டுகள் நாவலர் பாரதியார் தூத்துக்குடியில் வழக்குரைக்கும் தொழில் புரிந்தார். தூத்துக்குடியில் அலுவல் பார்த்த போது நாட்டுப்பற்றின் சிகரமாக விளங்கிய வ. உ. சிதம்பரனாரிடம் நெருங்கிப் பழகினார். அவர் பாரதியாரின் அறிவின் திறனைக் கண்டார். நாவலர் பாரதியாருக்கு நூறு வெண்பொற் காசுகள் திங்கள் தோறும் தந்து கப்பலோட்டும் தம் கம்பெனிச் செயலாளராக அலுவல் பார்க்கும் வாய்ப்பளித்தார்.

வீர சிதம்பரனாரின் கூட்டுறவு நாவலருக்கு உறுதுணையாகியது. எனினும் துன்பம் செய்யும் நிலையும் ஏற்பட்டது. வீர சிதம்பரனாரோடு சேர்ந்த பாரதியாரை ஆட்சியாளர் அச்சுறுத்தினர். அதற்கெல்லாம் அஞ்சாதவரானார் நாவலர்.

ஒருவர் உயர்வு அவர் தம் ஓய்வை எவ்வாறு பயன்படுத்துகிறார் என்பதைப் பொறுத்ததே ஆகும். பாரதியார், நாவலர், கணக்காயர், டாக்டர் என்ற பட்டங்களையும் பல பாராட்டுரைகளையும் பெறக் காரணம் அவரது ஓயாத உழைப்பே ஆகும். அவர் ஓய்வு நேரத்தில் விருப்பத்தோடு பயின்றது தமிழே. தமிழ் ஆராய்ச்சி புரிந்தது அவர் மேன்மைக்கு வழி வகுத்தது.

நாவலர் பாரதியாரின் மதிவன்மையை, சொல்லாடும் திறமையை நாட்டுக்கோட்டை நகரத்து மக்கள் அறிந்து தூத்துக்குடி சென்று தம் வழக்குகளுக்குத் தேவகோட்டைக்கு அழைத்துப் போந்தனர். நெடுந்தொலையான தூத்துக்குடிக்குச் சென்று அழைப்பது அவர்களுக்குத் துன்பமாய் இருந்ததால் மதுரையில் வந்து இருந்துவிடும்படி அவர்கள் வேண்டிக்கொண்டனர். அதற்கு இசைந்து நாவலர் 1920-ம் ஆண்டு மதுரை வந்து வாழ்ந்தார்.

செட்டி நாட்டு அரசர் இராசா சர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் அழைப்பை ஏற்று நாவலர் பாரதியார் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் தமிழ்ப் பேராசிரியராகச் சென்றார். அங்கே 1933-38 வரை ஆற்றிய கணக்காயர் தொழில் பிணக்கறுக்கும் நல்லோர் தொழிலாகவே இருந்தது. நடத்திய ஆராய்ச்சியும் நாட்டுக்குப் பயன்பட்டுத் திகழ்ந்தது.

அன்றே ஒரு நேரு

தமிழர்களைக் காட்டுமிராண்டிகள் என்று தம் தொல்காப்பிய ஆராய்ச்சி நூலில் எழுதிய திரு. மு. இராகவ ஐயங்காருக்கு ஏற்ற பதில் தந்தார் நாவலர். தமிழர்களின் திருமண வாழ்வில் களவறமும், கற்பறமும் தொல்காப்பியர் காட்டியது. இதுவெனத் தம் ஆராய்ச்சி உரையால் காட்டித் தமிழர்கள் காட்டுமிராண்டிகள் அல்லர் என்று காட்டினார் பாரதியார். பாரதியாரோடு பகைத்தெழுந்தனர் பலர். தம் சொல்லாலும் எழுத்தாலும் தம் கூற்று உண்மை என நாட்டினார் நாவலர். இவ்வாறு தமிழர் பண்பு காத்தார் பாரதியார். தமிழர் தமிழ் ஊற்றமும் உணர்வும் இன்னும் பெற்றே தீர வேண்டும்.

நாவலர் பாரதியார் ஓய்வு நேரங்களில் கம்பன் கவியமுதத்தைப் பருகினார். புதுமை ஒன்று கண்டார். தசரதன் செய்தது தவறு என்று அவருக்குத் தோன்றியது. கூர்ந்து ஆராய்ந்தார். சான்றுகளும் தெரிந்தன. சில சொற் பொழிவுகளில் அக்கருத்தை வெளியிட்டார். கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் அழைத்து இச்சொற்பொழிவையே நிகழ்த்தச் செய்தனர். அது உருக்கொண்டு "தசரதன் குறையும் கைகேயி நிறையும்" என்னும் நூலாக 1926ல் வெளி வந்தது.

திருவள்ளுவர் வாழ்க்கைப்பற்றிய பல ஐயங்கள் நாவலர் பாரதியார் மனத்தில் தோன்றியதால், அதுபற்றி ஆழமாகச் சிந்தித்தார். தம் ஆராய்ச்சியைச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பல்கலைக் கழகச் சொற்பொழிவின்போது 1929 ல் வெளியிட்டார். சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த டாக்டர். உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் எழுந்து அன்புகனியப் பாராட்டியதோடு மதுரைத் தமிழ்ச் சங்கத்தாருக்கு எழுதி வெளியிடும்படி தன் விருப்பத்தையும் தெரிவித்தார். அதன்படி மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் நாவலர் பாரதியாரிடம் எழுதி வாங்கி அச்சிட்டு "திருவள்ளுவர்" என்னும் அந்நூலை 1929-ல் வெளியிட்டனர்.

"சேரர் தாயமுறை" என்னும் அரிய ஆராய்ச்சி நூல் ஒன்று 1935-ல் வெளி வந்தது. "சேரர் பேரூர்" என்ற ஆராய்ச்சி நூலும் வெளி வந்தது. "மாரிவாயில்" என்னும் சீரிய நூல் ஒன்றும் பாடல் நூலாக எழுந்து 1936-ல் வெளி வந்தது.

அருந்தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திற்குப் பொருத்தமான புத்துரை கண்டு 1942-ல் வெளியிட்ட பெருமை நாவலர் பாரதியார் அவர்களைச் சேரும். "மங்கலக் குறிச்சிப் பொங்கல் நிகழ்ச்சி" என்னும் பாட்டுநூல் 1947-ல் வெளி வந்தது. இவற்றைத் தவிரப் பல கட்டுரைகள் ஆராய்ச்சி உரைகள் பலவிதழ்களில் வெளிவந்துள்ளன.

பட்டங்களும் பாராட்டுரைகளும்

பாவலர் பாரதியாரோடு நாவலர் பாரதியார் இளமைப் பருவத்தில் திரிந்தபோது இருவரும் பாட்டியற்றுவர். பாவலர் பாரதியாருக்கு ஓர் அவையார் பாரதிப் பட்டம் வழங்க நினைத்தனர். அப்போது அவருடன் பழகித் திரியும் நாவலர் பாரதியாருக்கும் அப்பட்டத்தை வழங்கத் தீர்மானித்தனர். அவ்வாறே இருவருக்கும் 'பாரதி' என்னும் பட்டம் வழங்கப் பெற்றது. பாவலர் சுப்பிரமணியம், சுப்பிரமணிய பாரதியானார். நாவலர் சோமசுந்தரம். சோமசுந்தர பாரதியானார். கல்வியில் மேற்பட்ட காரணத்தால் கிடைக்கப்பட்ட பட்டமிது.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தார் திரு. ச. சோ. பாரதியாரின் தமிழாராய்ச்சியையும் சொல்லாற்றும் திறமையையும் கண்டு வியந்து, உவந்து, 1944-ல் அழைத்து "நாவலர்" என்னும் நானிலம் போற்றும் பட்டத்தை வழங்கி மகிழ்ந்தனர். நாவன்மையுடையவர் நாவலர்.

மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார் இருபது ஆண்டுகளுக்குமேலாக மதுரையில் இருந்து குறளோடு சங்கத் தமிழையும் குழைத்து அன்பர்களுக்கு அள்ளி வழங்கும் பணி புரிந்து வருங்கால், 1954 ஜனவரியில் நாவலர் பாரதியாரை அழைத்து. பெருவிழா ஒன்று நடாத்தி, மதுரை மீனாட்சி ஆலை உரிமையாளர் உயர்திரு. கருமுத்து. தியாகராசர் அவர்கள் தலைமையில் பொன்னாடை போர்த்திக் "கணக்காயர்" என்னும் பிணக்கறுக்கும் பட்டம் வழங்கி மகிழ்ந்தனர். கணக்காயர் என்பது இலக்கண இலக்கியங்களை ஆய்ந்துரைப்பவர் என்றாகும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தார் நாவலர் பாரதியாரின் தமிழாராய்ச்சியையும் தமிழாழத்தையும் பாராட்ட வேண்டும் என்ற கருத்துக் கொண்டு பல்கலைக்கழக வெள்ளி விழாப் பட்டமளிப்பு விழாவின்போது டாக்டர் என்னும் உயர் பட்டத்தைக் கொடுத்துப் பெருமைப்பட்டனர். அதனைத் தொடர்ந்து இராசா. சர். முத்தையார் செட்டியார் அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலேயே ஒரு பொன்னாடை போர்த்து விழா நடத்தி மகிழ்ந்தனர். தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, பாரதிதாசன் முதலானோர் பாராட்டுப் பகர்ந்தனர்.

நாவலர் பாரதியாருக்குச் சொந்தமான பங்களா ஒன்று பசுமலையில் இருக்கிறது. அதில் இப்போது தம் இரண்டாம் மனைவியுடன் வாழ்ந்து வருகிறார்கள். நாவலருக்குச் சொந்தமாகச் சொத்து உண்டு. அது எட்டயபுரம், முடுக்கன் மீண்டான்பட்டி முதலான திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த ஊர்களில் உண்டு. சொத்து நன்செய்களும் புன்செய்களுமாகும். ஆண்டிற்குப் போதுமான வரும்படி உண்டு. அதனைக்கொண்டு நாவலர் பாரதியார் பசுமலையில் இனிமையாக வாழ்ந்து வருகிறார்கள்.

மொத்தத்தில் அவரது வாழ்வு இலக்கியத்தில் ஒரு பொன்னேடு; புதுமை நிறைந்தது. அது மேலும் ஒளிவீசித் தமிழகத்திற்கு வழிகாட்டுவதாகுக. நாவலர் புகழ் நாளும் வளர்வதாக!

★

[நாவலர் 80-ம் ஆண்டு நிறைவு விழாக் குழுவினரால் எழுதப் பட்டது.]

ராஜபால் பிஸ்கட்ஸ்

• குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்

[illegible] சங்குபிள்ளை, திண்டுக்கல்ரோடு, மதுரை.

திருச்சி

தேவர் மன்றத்தில்

15-8-59 சனி இரவு 10 மணிக்கு

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். இராசேந்திரன்

தலைமையில்

கண்ணதாசன்,

வளையாபதி முத்துகிருஷ்ணன்

நடிக்கும்

என். எஸ். கே.

நாடக மன்றத்தாரின்

தளபதி

நாடகம் நடைபெறும்.

★

கட்டணம்: ரூ. 10, 5, 3, 2, 1

பெண்கள் அணா 8

★

அமைப்பு: எம். எஸ். மணி

கலைஞர்களுக்குச் சிவகெங்கை வரவேற்பு!

★

சிவகெங்கையில்

16-8-59 ஞாயிறு காலை 10-மணி அளவில்

கண்ணதாசன்

அவர்கள்

"தலைவணங்காத் தென்பாண்டி மண்டலம்"

எனும் பொருள்பற்றிச் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்கள்.

அதுசமயம்

இலட்சிய நடிகர்

எஸ். எஸ். இராசேந்திரன்,

நடிகமணி டி. வி. நாராயணசாமி,

பி. எஸ். வீரப்பா,

எம். கே. முஸ்தபா,

வளையாபதி ஜி. முத்துகிருஷ்ணன்,

ராஜா வகாப் காஷ்மீரி,

திருமதியர்: எஸ். வரலெட்சுமி, தாம்பரம் லலிதா ஆகியோர் வருகை தருகின்றனர்.

★

அ. வெங்கிடுசாமி,

விழாக்குழுச் செயலாளர்,

சிவகெங்கை.

ஐயம் அகற்று!

கண்ணதாசன் பதில் தருகிறார்.

ய. மு. அண்ணார் தம்பி, சுங்கைநகர்.

நீங்கள் தி. மு. கவில் சேராத முன்பு எந்த இயக்கத்தில் தொண்டாற்றினீர்கள்?

1938-ல் தேர்தல் நடந்தபோது "வள்ளியப்பாவுக்கு ஓட்டுப் போடுங்கள்!" என்று காங்கிரஸ் கொடி பிடித்துக்கொண்டு போன சிறுவர்களில் ஒருவனாக நானும் இருந்திருக்கிறேன். அப்போது ஓரணாவுக்கு வாங்கிய மஞ்சள் குல்லாவை, இரண்டு வருடங்களுக்குமுன் எங்கள் வீட்டலமாரியில் கிடந்து கண்டெடுத்தேன். திருப்பத்தூர்க் கிட்டுவைய்யர் என்பவர் அப்போது எங்கள் வட்டாரத்திலே தீவிரமான காங்கிரசுக்காரர். குப்பாஞ் செட்டியார் என்பவர் எங்களூரில் தீவிரவாதி. கிட்டுவைய்யரை அழைத்து வந்து அடிக்கடிக் கூட்டம் போடுவார். "பாரத மாதா பரிபூரண சுதந்தரம் எய்துவளோ?" என்ற பாட்டை நான்தான் பாடுவேன். திருப்பத்தூர் வட்டத்திலேயே காங்கிரசுக்காக வாழ்க்கையை இழந்தவர்களில் கிட்டுவைய்யர் முதன்மையானவர். பாவம், தனது தள்ளாத வயதில் இப்போது ஒரு பள்ளிக்கூடத்தில் இரவுக் காவல்காரராக வேலை பார்க்கிறார்.

★

க. நடராசன், களந்தை

"இலக்ஷியம்" என்ற வடமொழிச் சொல்லிலிருந்து பிறந்ததுதான் "இலக்கியம்" என்ற சொல் என்பதாகச் சிலர் கூறுகிறார்கள். தங்கள் கருத்து யாது? இலக்கியம் என்பதற்குச் சற்று விளக்கம் கூறவும்!

இதில் கருத்து வேற்றுமை இன்னும் முடிவு பெறவில்லை. சில ஆண்டுகளுக்குமுன் கோவையில் நடந்த ஒரு முத்தமிழ் மாநாட்டில், இந்த ஒரு வார்த்தையைப் பற்றியே இரண்டு நாளும் முழுக்க முழுக்க வாதம் நடந்தது. அப்படியும் முடிவு தெரியவில்லை. இலங்கு + இயம் = இலங்கியம். இதுவே "இலக்கியம்" என்று வலிந்ததாகச் சிலரும், "இலக்ஷியம்" என்ற வடமொழிச் சொல்லிலிருந்து "இலக்கியம்" என்ற சொல் பிறந்ததாகச் சிலரும் கூறுகின்றனர். பின்னவர்கள் "இலக்ஷமணன்" என்பது "இலக்குமணன்" எனக் கூறப்படுவதைத் தங்கள் கூற்றுக்குச் சான்றாகக் கொள்கின்றார்கள். இதுபற்றிய தெளிவுரையை பன்மொழிப் புலவர் அவர்களிடமிருந்துபெற்று, "தென்றல்" வெளியிடும்.

கி. செயராமன், திருச்சி-2

"தென்றல்" இதழ் எத்தனை படிகள் விற்பனையாகின்றது?

வணிகன் வரவையும், பெண் வயதையும், பத்திரிகைக்காரன் விற்பனையையும் வெளியிடுவதில்லை.

★

இரா. இராமசாமி, கோபிச்செட்டிப்பாளையம்

"தென்ற"லில் மீண்டும் வெண்பாப்போட்டியா-விருத்தப் போட்டியா? எப்போது தொடங்கும்?

கொஞ்சம் பொறுங்கள். "தென்ற"லை இலக்கியத்துறைத் தினசரியாகக் கொண்டுவரத் திட்டமிட்டுக் கொண்டிருக்கிறேன். ஒருவேளை செப்டம்பரிலேயே "தென்றல்" தினசரியை நீங்கள் காணலாம். அரசியலுக்கும் கலைக்கும் இளம்பெண்ணிடம் வம்பு செய்த கதைகளுக்கும், தமிழிலே தினப்பத்திரிகைகள் இருக்கின்றன. தமிழறிவாளர்களுக்கு ஒன்று வேண்டாமா? முடியுமானால் இலக்கியத் துறைக்கென வரும் தினசரி, வெற்றிபெறுமா என்பதையும் "எப்படி நடத்தலாம்?" என்பதற்கான எண்ணங்களையும் "தென்ற"லுக்கு எழுதுங்கள்.

★

எஸ். கே. மூர்த்தி, பள்ளிஅக்ரகாரம்

"கவலையில்லாத மனித"னுக்குப் பின்தானே "பூமாலை"?

இல்லை! "பூமாலை"யென்ற பெயரும் "பூமுடித்தவள்" என்ற பெயரும் ஒரே மாதிரியாக இருப்பதால் "பூமாலை" என்ற தலைப்பு கைவிடப்பட்டது.

"கவலையில்லாத மனிதன்" எப்பொழுது வரும்?

"மார்கழித்திங்கள் மதிநிறைந்த நன்னாளில்!"

★

ஆத்தூர் அன்பு, திருச்சி

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் "குறட்பா" ஒன்றை மதுரை நகராட்சி மண்டபத்தின் சுவரில் பொறிப்பதை எதிர்த்து, அவையை விட்டு வெளியேறிய கம்யூனிஸ்ட் "குணக்குன்று"களைப் பற்றித் தாங்கள் என்ன எண்ணுகிறீர்கள்?

"அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை!"

வீ. இராமதுரை, நாமநத்தம்

தி. மு. க.வுக்கு அமெரிக்காவிலிருந்து பணம் வருகிறது என்கிறாரே, ம. பொ. சி.!

போகிறது! அமெரிக்கா எங்கேயிருக்கிறதென்று அவரைக் கேளுங்கள்.

"அல்லி பெற்ற பிள்ளை" எப்படி?

பாவம், அற்பாயுசு! முதல் காட்சி பார்த்துவிட்டு வருகிறவர்கள் இரண்டாம் காட்சிக்கு நிற்பவர்களைத் துரத்துகிறார்களாம்!

இலட்சிய நடிகர் எப்படியிருக்கிறார்?

தெளிவான கொள்கை; வசதியான வாழ்க்கை எம். ஜி. ஆருக்கொரு சக்கரபாணி; எஸ். எஸ். ஆருக்கொரு நாராயணசாமி! அறிவுள்ள மந்திரியிருந்தால் அரசனுக்குக் கவலையேது? சில்லறைப் படங்களையெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக முடித்துவிட்டு, தொல்லையில்லாமல் சொந்தப் படமெடுக்கத் திட்டமிட்டிருக்கிறார். இருக்கின்ற நடிகர்களிலேயே இளவயது நடிகர் அவர். இன்னும் பதினைந்து ஆண்டுகளுக்குமேல் தொழில் நடத்த முடியும்!

★

ஆர். நாராயணன், மதுரை

இப்பொழுது மேடையில் பேசுகிறவர்களெல்லாம் தி. மு. க. வையே தாக்கிப் பேசுகிறார்களே—ஏன்?

தாக்குகிறார்களா? வளர்ச்சி கண்டு திகிலடைந்து, சன்னி கண்டு பிதற்றுகிறார்கள். கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்களென்கிறார் ஒருவர். கூத்தாடிகளென்று கூறிவிட்டு நடிகர்களின் பாதங்களை அவரே தலையில் தூக்கி வைத்துக்கொள்கிறார். "பிச்சைக்காரர்கள்! பிச்சைக்காரர்கள்!" என்று கத்துகிறார் ஒரு பணக்காரர். தன்னை மறந்து ஞான சூனியங்கள் என்கிறது ஓர் அஞ்ஞானம். "எம். ஜி. ஆர். மலையாளத்தான்! மலையாளத்தான்!" என்கிறது ஒரு குப்பைக் குடியிருப்பு...எம். ஜி. ஆர். காரில் போலீஸ் சோதனை என்று போட்டுவிட்டு மன்னிப்புக் கேட்கிறது மற்றொன்று......கண்ணதாசன்புட்டி புட்டியாக வைத்திருக்கிறான் என்று எழுதிவிட்டு "என்மீது வழக்குப் போடமாட்டாயா? என்னையும் நாலு பேருக்குத் தெரியட்டுமே!" என்கிறான் மற்றொருவன்...மரணப் படுக்கையில் கிடக்கிறவனுக்கெல்லாம் மங்கல ஒலி பயங்கரமாகத் தோன்றுகிறது. கழுதை கத்திப் பொழுது விடிவதுமில்லை; கறையான் அரித்து இரும்பு கெடுவதுமில்லை; நாய் குலைப்பதால் கதிரவன் மறைவதுமில்லை. நரிகளின் ஊளை கேட்டு சிங்கங்கள் அஞ்சுவதுமில்லை.

சட்டவிரோதமாகப் பேசுவோர் மீதெல்லாம் ஏன் வழக்குத் தொடுக்கக்கூடாது?

குலைக்கிற நாய்களை எல்லாம் கோர்ட்டுக்குக் கொண்டுவந்தால் கோர்ட்டிலே மனிதர்கள் நடமாடுவது எப்படி?

★

சி. தமிழ்த்தென்றல், தாம்பரம்

இப்பொழுதெல்லாம் "தென்றல்" இதழ்களில் பன்மொழிப்புலவர் அப்பாத்துரையார் கட்டுரைகள் வருவதில்லையே—ஏன்?

ஒருமணி நேரங்கூட ஓய்வில்லை. மிகச் சிறந்த மிகப்பெரிய வேலையில் அவர் ஈடுபட்டிருக்கிறார். தமிழ் உள்ளளவும் நிலைபெறக்கூடிய அந்த எழுத்து வேலைக்கு இடையூறு நேரக்கூடாது என்றுதான் கூட்டங்களுக்குக்கூட அவர் போகக்கூடாதென்று அண்ணா அவர்கள் கூறிவிட்டார்கள்.

★

பொ. ச. ராமசாமி, அருப்புக்கோட்டை

சிவாஜி கணேசன் தம்பி கல்யாணத்திற்குத் தங்களுக்கு அழைப்பு அனுப்பாதது உண்மையா?

தவறு! அஞ்சலிலேயே இரண்டு அழைப்புகள் வந்தன. தோழர் சந்தானம் நேரிலேயே ஒரு அழைப்பைக் கொண்டுவந்து கொடுத்தார்

★

காந்தாமணி புட்பரத்தினம், சென்னை-3

நேற்று (2-8-59) நடைபெற்ற எழுத்தாளர் மாநாட்டில் பேசிய ரா. ஸ்ரீ. தேசிகன் என்பவர் "மறைமலை அடிகள் எழுதியுள்ளது தமிழா?" என்று கேட்டார்...

சிலரைப் பார்க்கும்போதே 'இவர்கள் மனிதர்களா?' என்று தோன்றும். அவர்களில் இவரும் ஒருவர்...!

★

காத்தமுத்து, திருப்புவனம்

தமிழரசுக் கழகத்தின் கவிஞர், கலைஞர், கலைக்காவலர் மூவரும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்?

கவிஞர் எதுகை மோனைகளை எடைக்கணக்கில் வாங்க முயல்கிறார்.

கலைஞர் வல்லின மெல்லினத்தை டப்பிக்குள் அடைக்கப் பார்க்கிறார்.

கலைக்காவலர் கையெழுத்துப் போடக் கற்றுக்கொண்டிருக்கிறார்.

சின்ன அண்ணாமலை எப்படி இருக்கிறார்?

"ஆரியக் கூத்தாடினாலும்
தாண்டவக் கோனே—காசு
காரியத்தில் கண்வையடா
தாண்டவக்கோனே!"

பொதுவாகத் தமிழரசுக்கழகம் எப்படிப்பட்டது?

அது ஒரு பனைமரம் மாதிரி! பனை மரத்திற்கும் கிளைகளில்லை. அதற்கும் கிளைகளில்லை...பனைமரத்திலே ஆந்தைகளும், காக்கைகளும்தான் தங்கும்; அந்தக் கழகத்திலும் அப்படியே!

அடுத்த இதழில்—
"சிங்கத் தமிழன்-சிங்களத் தமிழன்!"—
ஆசிரியர் கண்ணதாசன் எழுதும்
கவிதை.

அது தமிழே அல்ல!
இவன் தாய் பெண்ணே அல்ல!

"எழுத்தறியேன்! மொழியறியேன்! தமிழர் நாட்டின்
இயல்பறியேன்! சிறப்பறியேன்! பண்பினோடும்
பழுத்தசுவைப் பாடல்களும் அறியேன்!" என்றால்
பாவிமகன் படிப்பதற்கோர் வழியைச் சொல்வேன்!
அழுத்தமிகும் மறைமலையின் தமிழைப் பார்த்தும்
அறத்தமிழன் திரு. வி. க. மொழியைப் பார்த்தும்
வழுத்துகிறான் "இவைதமிழா?" என்றே என்றால்
வடித்தெடுத்த மடையனெனத் துணிந்தே சொல்வோம்!

செத்தமொழி பெற்றமகன், தமிழைப் பார்த்துத்
திணறுகிறான்! மயங்குகிறான்! வேற்று நாட்டுப்
பொத்தல்களைத் தமிழாக்கி விற்ப தற்குப்
புறப்பட்டோன்; ஆதலினால் புலம்பு கின்றான்!
அத்தியிலே பூத்தமலர் அனைய நாட்டில்
அழகுமொழி படைத்தமறை மலையைக் கண்டால்
சித்திரமும் தமிழ்பேசும்; திறமி லாத
சிறுநரிதான் ஊளையிடும்! இட்டான் ஊளை!

வேரெடுத்த செம்மைமொழி தமிழல் லாமல்
வேறெதுதான் தமிழாகும்? அத்திம் பேரும்
பூரிகளும் ஸ்வாமிகளும் ஆச்சார் யாளும்
பூரணமும் ஸ்வாகதமும் தமிழா? ஜோடி,
நாரியரும், மங்களமும் தமிழா? அஸ்வ
ரட்சகரும், பட்சிகளும் தமிழா? வேத
பாரதமும், சமிதிகளும் தமிழின் சொத்தா?
பலவீட்டுப் பிச்சையைத்தான் தமிழென் பாரா?

திருமணத்தில் இழவோசை! பெயர்க ளெல்லாம்
செத்தமொழி வடிவங்கள்! மேடை யெங்கும்
திருமாற்றும் ஸ்ரீமான்கள், பிரசங் கங்கள்!
சேர்ந்திருப் பதெல்லாம மகா ஜனங்கள்!
குறள்கூறு மவையினிலும் 'ஸ்மிருதி' நாற்றம்!
குறிக்கவரும் அதிகாரம் அத்தி யாயம்!
பொருள்கூறும் உணவுக்கோ போஜ னங்கள்!
பூலோகம், தேவாக்கள், ஈஸ்வ ராளே!

சையோகம் சந்தோஷம் தாப ருத்ரம்
சம்சாரம் சன்யாசம் பரத நாட்யம்
வைபோகம் மாங்கல்யம் சுபமு கூர்த்தம்!
மதபேதம் ஸ்ரீலஸ்ரீ பஜனை பூஜை!
கைலாகு நைவேத்யம் கமல பந்தம்!
கல்யாணம் பிதுர்பாத்யம் அர்த்த ஜாமம்!
தெய்வாம்சம் ஸ்ரீபாதம் தேவி புஷ்பம்!
ஸ்வாரஸ்யம் பகுநேர்த்தி தேவ மாதா!

இவையெல்லாம் தமிழென்பான் அடிக ளாரின்
எழில்கண்டு புலம்புகிறான்! மறு மலர்ச்சி
அவையென்றே எழுத்தாளர் அவையைச் சொல்வார்!
ஆங்குமொரு புல்லுருவி! தமிழ் நாட்டீர்!
"கவையாகிக் கொம்பாகிக் காட்ட கத்தே"
காய்கின்ற விறகாகும் மரங்கள் யாவும்
அவையேறி வாராமல் காக்க வேண்டும்,
அடிமீது அடிவைத்தே ஓட்டவேண்டும்!

முப்பாலுக் கப்பாலோர் பொருளு மில்லை!
மூவாத சிலம்பின்றோர் கூத்து மில்லை!
தப்பாத புறமல்லால் வீர மில்லை!
தளிர்போலும் அகமல்லால் காதல் இல்லை!
செப்பாகிச் சிலையான பொருளைப் போல(த்)
திறங்கொண்டு வேர்கண்ட தமிழல் லால்
எப்போதும் புகழ்பாடும் மொழியே இல்லை!
இருக்கின்றதென்பான் தாய் பெண்ணே இல்லை!

சித்தூர் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்



கடந்த 31-7-'59 அன்று சித்தூர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. திரளான மக்கள் திரண்ட அந்தக் கூட்டத்திலே ஆசிரியர் கண்ணதாசன் அவர்களும், திருபாதி தேசியமணி கண்ணன் அவர்களும் கலந்துகொண்டு கழகக் கருத்துக்களை விளக்கினர். ஆசிரியர் அவர்கள் பேசும் காட்சியையும், தம்மிடம் ஐயம் கூறி விளக்கம் கேட்ட தோழர்களுக்குப் பதிலளித்துக் கொண்டிருப்பதையும் படத்தில் காண்க.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு